
1-1-55
பொன்னி
விலை
4
அணா
..Radha..

அட்டைப் படம்
ஓவியம்

கவிழ்ந்த தாமரை
முகம் திரும்புமா—அந்தக்
கவிதை ஓவியம்
எனை விரும்புமா ?

— புரட்சிக் கவிஞர்.

OFFICE OF REGISTRAR OF BOOKS
3 JAN

பொன்னி
பொருளடக்கம்

மலர் 8 | ஜனவரி 1, 1955. | இதழ் 10

திருவள்ளுவர் ஆண்டு 1985
மார்கழித் திங்கள் 17-ம் நாள்

தலையங்கம் .... 3
செய்தித் திரட்டு ... 6
இலங்கைத் திருமுகம் ... 7
நமது மருத்துவர் .... 8
அந்த நாள் .... 9
ஒளி மாடம் (தொடர் கதை) ... 17
கவிமணியின் கருத்துக்கள் .... 25
இலக்கியச் செல்வங்கள் .... 29
அல் அமீன் .... 33
ஒளிந்துகொண்டாள் ... 36
எனக்கேன் வாட்டம் ? ... 37
திரை விலகியது ... 38
சிதறிய சிந்தனை .... 49
நம் கருத்து ... 58
அன்று முதல் இன்று வரை .... 60
வளரும் படங்கள் — 62
இவர்கள் நடிக்க விரும்புகின்றனர் 64

★

விலை 4 அணா

"பொன்னி" யில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே. கட்டுரையாளர்களின் கருத்துக்கு
— ஆசிரியர் பொறுப்பல்ல —

# அலுவலக அறிவிப்பு

பொன்னி உரிய நாளில் சரிவர வெளிவருவதில்லை என விற்பனையாளர்கள், எழுத்தாளர்கள், பொன்னி அன்பர்கள் ஆகியோரிடை ஒரு பெருங் குறைபாடு எழுந்துள்ளது. உரிய காலத்தில் உங்கள் கையில் தவழத் தவறமாட்டாள் பொன்னி என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்,

நீங்கள் கேட்டவை, வளரும் இலக்கியம் ஆகிய பகுதிகள் அடுத்த இதழ் முதல் தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் இடம் பெறும்.

அடுத்த இதழிலிருந்து சில மாறுதல்கள் நீங்கள் வியக்கும் வண்ணம் நிகழ இருக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள் — எதிர்பாருங்கள்.

பொங்கல் மலர் எனத் தனியே மலர் இந்த ஆண்டு வெளியிடவில்லை. அடுத்த இதழ் 15—1—55ல் மலரும்.

*பொறுப்பாளர்.*


உல்லாசப் புத்தகம்! உணர்ச்சிகளின் பெட்டகம்!

இலவு காத்த ஏந்திழை நால்வரின் இதயக் கலக்கம்!

*அதிலே*

இரட்டைப் பின்னல்காரியின் வெற்றி முழக்கம்!!

**"பாசுமணி"**

*எழுதிய*

# பஞ்ச பாவையர்

விலை 1—8—0. கழிவு 30%

தேவைக்கு:

பாபு பதிப்பகம்
25, வெங்கய்யர் தெரு,
சென்னை—1.

★

அமிர்த பதிப்பகம்
தபால் பெட்டி எண் 1918
சென்னை—1.

# புதிய நாடக சட்டம்

புதிதாகச் சட்டமாக்கப்பட்டுள்ள நாடக சட்டம் என்ற சட்டமில்லாச் சட்டம் ஒரு புது நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறது. காமராசர் ஆட்சியில் குமுறல் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட சில சூது மதியினரின் செயலோ இது என நாம் ஐயுறவேண்டியிருக்கிறது. மந்திரி சபையில் இருக்கும் சில காமராச எதிரிகளே இந்தச் சூழ்ச்சிக்கு மூலவர்கள் என்பதைக் கனம் முதலமைச்சர் உணர்வார் என நம்புகிறோம்.

ஒரு காலத்தில் கலைத்துறை அனைத்தும் பக்தி எண்ணங்களை மக்களிடம் பரப்புவதற்கே பயன்பட்டுபட்டு வந்தன. மக்கள் பழமைப் பிடியிலேயே சிக்கியிருந்தனர். காலப்போக்கில் பிடிதளர்ந்தது. எதையும் சிந்தித்து முடிவுகாணும் ஆற்றல் பெற்றனர் மக்கள். விளைவு, அறிவுத் துறையில் விரைந்து நடைபோடும் அளவு நாடகத் துறையில் முன்னேற்றம் ஏற்பட்டது.

நாடகத் துறைக்குக் கடிவாள மிட்டுவிட்டனர் ஆட்சியாளர்கள். இது புதுமைக் கருத்துக்களைத் தாங்கிவரும் நாடகங்களைத் தடைசெய்யும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டதே தவிர வேறல்ல. இது கலையை மட்டும் கட்டுப்படுத்துவதல்ல—நாட்டு முன்னேற்றத்திற்கே முட்டுக்கட்டையாகும்.

இச்சட்டத்தினால் நாடக மேடைகளெல்லாம் பஜனைக் கூடங்களாகத்தான் காட்சி தரமுடியும். இது நாடகக்கலைஞர்களைப் பாதிப்பதோடு மட்டுமல்ல—ரசிகர்களையும் ஏமாற்றுவதாகும்.

புதுச்சட்டத்தின் மூலம் புதுமைக் கருத்துக்களைக் குழிதோண்டிப் புதைக்க எல்லா வகையிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. வரும் ஜூலை 15க்குள் இம்மசோதாவை ஆட்சியாளர்கள் திரும்பப் பெறாது விடாப்பிடியாக அமுல் நடத்துவார்களானால் அதனாலேற்படும் கடும் எதிர்ப்பைச் சமாளிக்க நேரிடும் என்பதை எச்சரிக்கிறோம்.

# ரூ. 57,773

[முன் ஆறு போட்டிகளில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. சொந்த முகவரியிட்டு, தபால் தலையுடன் கூடிய கூடு அனுப்பும் நேயர்களுக்கு போட்டி எண் 6-ன் முழு விபரமும் அனுப்பப்படும்]

போட்டி எண் 8 — தந்தி "NEWERA"

# குடியரசு பம்பர் போட்டி

## எல்லாப் பரிசுகளும் உத்திரவாதம்

ஒவ்வொரு முற்றிலும் சரியான விடைக்கு ரூ. 2750/- மேலிருந்து கீழ் முதலிரண்டு வரிசைகள் சரியான ஒவ்வொரு விடைக்கும் ரூ. 750/-. மேலிருந்து கீழ் முதல் ஒரு வரிசை சரியான ஒவ்வொரு விடைக்கும் ரூ. 70/-. மேலிருந்து கீழ் முதலிரண்டு எண்கள் சரியான ஒவ்வொரு விடைக்கும் ரூ. 7/-. முதல் எண் சரியான விடைக்கு ரூ. ரூ. 1/- பரிசு வவுச்சரும், 16 கூப்பன்கள் அனுப்பும் ஒவ்வொருவருக்கும் ரூ. 1/- பரிசு வவுச்சரும் வழங்கப்படும். வேறு மூன்று பரிசுகள் ஒரே பெயரில் அதிகப்படி கூப்பன்கள் பூர்த்தி செய்து அனுப்பியவர்கட்கு முறையே ரூ. 300/- ரூ. 200/- ரூ. 100/-

**46**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

4 முதல் 19 வரையுள்ள எண்களைப் பக்கத்திலிருக்கும் கட்டங்களில் பூர்த்தி செய்க. இடமிருந்து வலமாக உள்ள வரிசைகளையோ, மேலிருந்து கீழாகவுள்ள வரிசைகளையோ, சதுரத்தின் மூலைகளுக்குக் குறுக்காகவோ எந்த வரிசையைக் கூட்டினாலும் மொத்தம் 46 தான வரவேண்டும். ஒரு நம்பரை ஒரே முறைதான் உபயோகிக்கலாம்.

**இந்தியாவில் தபாலில் சேர்க்கவேண்டிய**

**கடைசி நாள் 2-2-55**

**வெளிநாடுகளில் (ஏர்மெயில்)**
**தபாலில் சேர்க்கவேண்டிய**

**கடைசி நாள் 25-1-55**

**விடை 12-2-55**

பிரவேசக் கட்டணம் :

| | |
|---|---|
| கூப்பன் 1-க்கு (1 ஷில், 6 பென்ஸ்), | ரூ. 1-0-0 |
| அல்லது 4 கூப்பன்களுக்கு (4 ஷில், 6 பென்ஸ்), | ரூ. 3-0-0 |
| அல்லது 16 கூப்பன்களுக்கு (15 ஷில், 6 பென்ஸ்). | ரூ. 10-0-0 |

7824

விதிகள் :—

மேலுள்ள விபரப்படி கட்டணத் தொகையுடன் ஒருவர் சாதாரணத் தாளில் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். விடை கூப்பன்களுடன் M. O. இரசிது, போஸ்டல் ஆர்டர் அல்லது பாங்க் டிராப்டைக் கட்டணத்துக்காக இணைக்கவும். (தொகை மீரட், நியூ எரா காம்படிஷன்ஸுக்குக் கொடுபடுமாறு எழுதப்பட வேண்டும்.)

வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள், பாங்க் டிராப்டுகள், மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

M. O. கூப்பன்களிலும், விடைத்தாளிலும் உங்கள் பெயரையும் முகவரியையும் தெளிவாக எழுதவும். விடைகளுக்கு ஆங்கில எண்ணையே உபயோகிக்கவும்.

மீரட் கன்டோன்மெண்ட், பஞ்சாப் நேஷனல் பாங்க் லிமிடெட்டில் டிப்பாஸிட் செய்துவைக்கப்பட்டுள்ள சீலிடப்பட்ட எமது சரியான விடைக்கு வரிக்கு வரி சரியான விடைதான் தவறில்லாதது என்று கருதப்படும்.

கடிதப் போக்குவரத்துகள் ஆங்கிலத்தில் தான் வைத்துக்கொள்ள வேண்டும். முடிவு தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள்ளாக அனுப்பப்படும் விடை விபரமும் வெற்றி பெற்றோரின் விபரமும் பெற உங்கள் முகவரியுடன் தபால் தலை ஒட்டிய கூடு அனுப்புக. போட்டி நடத்துவோரின் முடிவுதான் முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். இதுவே இந்தப் போட்டியில் கலந்துகொள்வோருக்கு முக்கிய விதி.

கூப்பன்களைக் கட்டணத்துடன் கீழுள்ள முகவரிக்கு அனுப்புக :-

★

## விடை
## போட்டி எண் 6
கூடுதல் 42.

| | | | |
|---|---|---|---|
| 5 | 4 | 15 | 18 |
| 16 | 17 | 6 | 3 |
| 14 | 11 | 8 | 9 |
| 7 | 10 | 13 | 12 |

மேலுள்ள விடை நியூ எரா காம்படிஷன்ஸ் (எண். 6) எங்களிடம் 13-11-54ல் சீலிட்ட கவரில் டிப்பாஸிட் செய்யப்பட்டு இன்று எங்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது என்று அத்தாட்சி கூறுகிறோம். இதன் நகல் ஒன்று பாங்கில் உள்ளது.

பஞ்சாப் நேஷனல் பாங்க் லிமிடெட்க்காக
(ஒப்பம்) M. C. Grover.
13-12-54
மானேஜர், மீரத் கண்டோன்மெண்ட்.

# NEW ERA COMPETITIONS (No. 8.)
P. B. 15. The Mall. MEERUT. (U. P.)

# செய்தித் திரட்டு

**செல்லாத வாக்குரிமைச் சீட்டுகள்**

கோவை மாவட்டக் கழகத் தேர்தலில் செல்லாத வாக்குரிமைச் சீட்டுகளின் தொகை அரை லட்சமாம். இதனின்று அந்த மாவட்டத்தில் வாக்குரிமையைப் பற்றித் தெரியாதவர்களின் எண்ணிக்கையும் தெரிகிறதல்லவா?

**பட்டப் படிப்பின் காலம் குறைவு**

கல்லூரிப் பட்டப் படிப்பை மூன்று ஆண்டுகளாகக் குறைக்கும் திட்டத்தை சென்னை பல்கலைக் கழகச் செனட் சபை ஏற்றுக் கொண்டது. இத் திட்டத்தின்படி உயர்நிலைப் பள்ளிகளின் படிப்பு ஏழாண்டாக அதிகரிக்கப் படும்.

**பம்பாயின் வளர்ச்சிக்கு 48 கோடி.**

பெரிய பம்பாய் பகுதியை முன்னேற்றஞ் செய்வதற்குரிய ரூ. 48 கோடி வளர்ச்சித் திட்டம் ஒன்றை பம்பாய் நகரசபை திட்டக் குழுவிடம் சேர்ப்பித்திருக்கிறது. இது அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுமாம்.

**"திரும்பிப் போ"**

மக்களின் வாக்கைப் பெற்று, துரோகத்தைத் துணைக்கொண்டு பதவியை எட்டிப் பிடித்த மந்திரி ராமசாமிப் படையாச்சி ஒரு கூட்டத்தில் பேச எழுந்ததும் மக்கள் கிளப்பிய வாழ்த்தொலி தான் இது.

**நேரு மறுத்தார்!**

மத்திய மாகாணத்தின் முதன் மந்திரி பண்டித ரவி சங்கர் சுக்லா மீது சாட்டப்பட்டுள்ள லஞ்ச ஊழல்கள் பற்றிய புகார்களை விசாரணை நடத்த நேரு மறுத்தார்.

**எங்களுடன் சேர்ந்தால்........**

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் திராவிடக் கழமும் சேர்ந்தால் அடுத்தப் பொதுத் தேர்தலில் வெற்றி நிச்சயமென்று தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணா கூறினார்.

**விமானக் கண்காட்சி**

இலங்கை ரத்மலானா விமான நிலையத்தில் 1955 ஜனவரி 9-ந் தேதி நடக்கவிருக்கும் மிகப் பெரிய கண்காட்சியில் பெங்களூர் ஹிந்துஸ்தான் விமான நிலையத்தார், ஒரிஸ்ஸா விமான கிளப், வட இந்திய விமான கிளப், கராச்சி விமான கிளப், இலங்கை ராயல் விமானப் படையினர் ஆகியோர் பங்கு கொள்வர். ஒரு போலி விமான யுத்தத்துடன் சுமார் இரண்டே கால் மணி நேரம் அணிவகுப்பும் நடைபெறுமெனத் தெரிகிறது.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொங்கல் விழா!**

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் விடுதியில் பொங்கல் விழாக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பல்கலைக் கழக வரலாற்றிலே இது போன்ற விழாக்கள் கொண்டாடுவது இதுவே முதல் தடவையாகும்.



# இலங்கைத் திருமுகம்



"துரைசாமி"

"தென் நாடு ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் நாடாகப் போகிறது; அப்போது அது இலங்கை மீது படை எடுக்குமென்ற அஞ்சத்தக்க காரணங்கள் இருக்கின்றன. படைஎடுப்பு அபாயத்திலிருந்து இலங்கையைப் பாதுகாப்பதற்குத் திரிகோணமலை கடற்படைத்தளமும் நமது நேசநாடான பிரிட்டிஷாரிடமிருக்கவேண்டியது மிக அவசியமென்று கருதுகிறேன்" இவ்வாறு இலங்கைப் பிரதம மந்திரி சர் ஜோன் கொத்தலாவலை பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது கூறினார்.

திரிகோணமலை ஒரு சிறந்த கடற்படைத் தளமாக இருப்பதால்தான் இலங்கைக்கு வெளி உலகில் மதிப்பு இருக்கிறது. அத்தளம் இல்லாவிட்டால் இலங்கை ஒருவருமறியாத மாலைத் தீவுகளாகவே இருக்குமாம்,

இந்தியப் பிரதமர் திரு. நேருவின் கருத்தைப் பிரதிபலிப்பவர் என்று கூறப்படும் திரு. பணிக்கர் எழுதிய ஒரு புத்தகத்தில் இந்தியாவின் பாதுகாப்பிற்குத் திரிகோணமலைக் கடற்படைத் தளம் மிக அவசியமென்று எடுத்துக் காட்டியிருப்பதைத் திரு. கொத்தலாவலை சுட்டிக் காட்டுகிறார்.

இந்தியா தன்னைத் தாக்குமென்று பாகிஸ்தான் அஞ்சிக் கொண்டிருக்கிறது. அதனாலேயே "சீயாட்டொ" ஒப்பந்தத்தில் சேர்ந்துவிட்டது. இந்தியாவையும் நேருவையும் நாம் மதிக்கிறோம். ஆனால் நேரு என்ன சிரஞ்சீவியா? நேருவுக்குப் பிறகு இந்தியா நம்மீது படை எடுத்தால் நாம் என்ன செய்வது? பிரிட்டிஷார் நமது நண்பர்கள்; அவர்களது மொழி, கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை முறை எல்லாம் நமக்குப் புதியவையல்ல. அவை நமக்குள் ஊறிக்கிடப்பவை. பிரிட்டிஷார் நம்மை ஒதுக்கித் தள்ளினாலன்றி நாம் காமன்வெல்த்திலிருந்துபிரியப்போவது கிடையாது என்று திரு. கொத்தலாவலை மேலும் கூறினார்.

இலங்கை ஒரு சுதந்திரநாடு. இதில் அன்னியர் ஆதிக்கமோ தலையீடோ கிஞ்சிற்றும் கிடையாதென்று சிங்களத் தலைவர்கள் இதுகாறும் தம்பட்டமடித்துக் கொண்டு திரிந்தனர். ஆனால் பிரதமர் கொத்தலாவலை தமது எஜமான பக்தியைத் தோலுரித்துக் காட்டியது உண்மை நிலையை உணரக் கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாகவே கருதப்படுகிறது.



# நமது மருத்துவர்

G. வெங்கடப்பா M. B. B. S. (Ex) I. A. M. C.

வினு: மருத்துவரே, என் வயது 20. தூங்கும் பொழுது மூச்சு விட கடினமாக இருக்கிறது. ''கர்—கர்'' சப்தம் வருகிறது. நான் என்ன செய்ய வேண்டும்?

P. செல்வம், திருவாரூர்.

விடை: காலையிலும், இரவிலும் நீங்கள் சுவாசப் பயிற்சி செய்யவேண்டும். மூக்கின் வழியாக சுவாசித்து உள்ளுக்கு இழுத்து, மார்புக் கூட்டை நிரப்பி, பின் நாசியின் வழியாக வெளி விட வேண்டும். ஐந்து நிமிடம் செய்யவேண்டும். மூக்கு, தொண்டை பார்க்கும் கைதேர்ந்த டாக்டரிடம் காட்டி, சதை வளர்ந்து இருந் தால், அதற்குச் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். தலே நிமிர்ந்து நடப்பதும், நாசியின் வழியாக சுவாசிப்பதும், சாதாரண தேக அப்பியாசமும் உங்களுக்கு சுகம் கொடுக்கும்.

வினு: ஐயா என் பல் ஈறுகளில் இரத்தமும் சீழும் மூன்று வருட மாக வருகின்றன. மேல் வரிசையில் ஐந்து பற்களேப் பிடுங்கி பொய்ப் பற்களேக் கட்டிக்கொண்டேன். மற்ற பற்களில் சில ஆடு கின்றன. சீழ் வருகிறது. தயவு செய்து மருத்துவ யோசனே கூறுங்கள்?

K. இன்பரபின், மதுரை.

விடை: உங்களுக்கு வியாதி கடைசிக் கட்டம் அடைந்து விட்ட தாகத் தெரிகிறது. மேல், கீழ் வரிசைகளில் உள்ள எல்லாப் பற் களேயும் பிடுங்கிவிட்டு, அழகான பொய்ப் பற்களே வைத்துக்கொள் ளுங்கள். ஒரு சில மாதங்களுக்குப் பின் சொன்னவாறு செய்து பாருங்கள்: சீயக்காய், புகையிலே ஆகிய இரண்டையும் சமபாகம் எடுத்து துண்டித்து பாத்திரத்தில் இட்டு, கருகாதபடி பொன்னிற மாக வறுத்து, அரைக்கும் கல்லில் வைத்து வாசனே வேண்டிய அளவு கட்டி கற்பூரமும், ஓம சத்தும் சேர்த்து அரைத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும், இந்தப் பற்பொடியினுல் காலேயிலும், இர விலும் பல் துலக்கி வர ஆடும் பல், இரத்தம், சீழ் முதலிய தொந் திரவுகள் நீங்கிவிடும். மலம் கழிக்க உட்கார்ந்து இருக்கும் வரை யில், இரண்டு பல் வரிசைகளேயும் சேர்த்து நன்ருகக் கடித்துக் கொள்ள வேண்டும்.

[கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம் இசைவு பெறல்வேண்டும்]




## காட்சி 28

[இடம்:—கங்கையின் வடகரை; வடவர் தென்னவரின் வாள்மயங்கு படுகளம்; வில்லவன் கோதையும், செங்குட்டுவனும் வடவர் தலைகளை வாளுக்கிரையாக்கி வலம் வருகின்றனர்; களம் புகுந்த சிங்க ஏறுகள் கரிமாக் கூட்டம் காணாது தேடிப்பார்க்கின்றன.]

வில்லவன்: இகழ்ந்தீரோ.......ஏமாந்தவர்களே! வையகம் தோன்றிய அந்த நாளிலே வளர்ந்தெழுந்து மொழி படைத்தோரை வாய்காவாது பேசினீர்! வரலாற்றிலே வீரத்திற்கோர் வைப்பிடமாய்த் திகழும் வண் தமிழ் நாட்டாரை வன்சொல்லால் தூற்றினீர்! மறப்போரிலும் அறப்போர் புரியும் மானவீரர் தம்மை ஈன மொழி பேசி இகழ்ந்தீர்! பண்பட்ட தமிழினத்தை — பகைவர்க்கும் பெருஞ்சோறளித்த உதியஞ்சேரலாதன் பரம்பரையைக் கண்கெட்டு நின்று கடுஞ்சொல்லால் பழித்தீர்!

செங்குட்: ஆம்! பயனில் சொல் பாராட்டுவான் மகனல்ல மக்கட் பதடியென்பதை இந்த மண்ணகம் அறிய, கனகவிசயர் தலையிலே கல்லேற்றி சோழ பாண்டியற்குக் காட்டி வாருங்கள்........ இழுத்துச் செல்லுங்கள் காவா நாவின் கனகவிசயரை........(கனகவிசயர் கட்டி இழுத்துச் செல்லப்படுகின்றர்)

மாடலன்: வாழ்க எங்கோவே! வாழ்க!

செங்: மாடல!

மாடலன்: மாதவி மடந்தை கானற் பாணி கனகவிசயர் தம் முடித்தலை நெரித்தது விந்தையினும் விந்தையே!

செங்: மாடல! பகைப் புலத்தரசர் பலர் அறிய ஈண்டு நீ கூறிய நகைத்திறத்தின் பொருள்.......!

வில்லவன்: மங்கையின் பாடல் மன்னனின் மணிமுடி நெறித்ததோ.......விந்தைதான்........

மாடலன்: விந்தைதான் வேந்தே! விந்தைதான்! பூம்புகார்—ஆம்! அங்கேதான்...வணிகர் மரபிலே வளம் நிறைந்த குடியிலே பிறந்தான் கோவலன்....ஒத்தமரபிலே உயர்ந்தகுடியிலே பிறந்தாள் கண்ணகி. கண்ணகி நல்லாளைக் கடிமணம் புரிவித்தனர் பெற்றோர்.... கண்ணகி கோவலன் இவர்கள் இன்ப வாழ்க்கையின் இடை புகுந்தாள் மாதவி....ஆடலால்....பாடலால்....அழகின் நிறைவால்...அன்பு மொழியால் கண்ணகியின் கணவனைத் தன் காதலனாக ஏற்று விட்டாள் மாதவி........கண்ணகியைக் கனவிலும் நினையாதவனாய் மாதவியொடு மருவி வாழ்ந்தான் கோவலன்.

வில்லவன்: என்ன? மணம்புரிந்த மனைவியை விட்டு மாதவியொடு திரிந்தானா?

செங்: காரணம்......?

மாடலன்: காரணம் என்ன இருக்கிறது? எல்லாம் விதிசெய்த சதிதான்....

மகிழ்வூட்டி: விதி.......விதி.......எதற்கெடுத்தாலும் விதிதான் காரணமோ? விதி செய்த சதியல்ல வேந்தே!

மாடலன்: பின் என்ன? விதியன்றி வேறு எதுதான் இவ்வாறு செய்ய முடியும்!

மகிழ்வூட்டி: வேதனைப் படாதீர் வேதியரே! விதி செய்த சதியல்ல! மடமையில் மதி மூழ்கியதுதான் காரணம்...

மாடலன்: புரியாமல் கூறுதீர்....

மகிழ்வூட்டி: தெரியும்படியாகக் கூறுகின்றேன்.

செங்: மகிழ்வூட்டியின் மதி வேலைசெய்யத் தொடங்கிவிட்டது போலிருக்கின்றது....

மகிழ்வூட்டி: வேந்தே வாழ்க! மகிழ்வூட்டிக்கு மகிழ்ச்சி ஊட்டுவதைத் தவிர வேறென்ன தெரியும்...நான் கூறப்போவதெல்லாம் நமது அடிகள் கூறியவைகளே!

செங்: யார் இளங்கோவா....!

வில்லவன்: என்ன சொன்னார்?

மகிழ்வூட்டி: தமிழர் பண்பாட்டைத் தலைகுனியச் செய்து வடவர் பண்பாட்டை ஏற்று வாழத் தொடங்கியதால் வந்த வினை தான் காதல் பூங்காவிலே காதலர் வண்டுகளாகிக் களித்து வாழ

மனமொத்து நினைத்திருந்தால் மங்கை வாழ்ந்திருப்பாள்! மணவாளன் மகிழ்ந்திருப்பான்! ஆனால் கண்ணகி கோவலன் கதை அதுவல்ல! பெற்றோர் தேடினர் பிள்ளையும் பெண்ணும்; பிணைக்கப் பட்டனர் வாழ்க்கையில்; மனம் ஒவ்வா மணம், வாழ்க்கையிலும் மணம் வீசவில்லை. பிணவாழ்க்கை பெறத்தான் அது பெருந்துணை புரிந்தது.

வில்லவன்: மணமான பின்னராவது மனமொத்து வாழ்ந்திருக்கலாமே!

மகிழ்வூட்டி: இடையில்தான் மாதவி புகுந்து விட்டாளே!

செங்: கண்ணகியைக் காட்டிலும் மாதவி....

மகிழ்வூட்டி: மன்னர் மன்ன! சிறந்தவர்கள்தான் இருவரும்....

கட்டழகு இருந்தது கண்ணகியிடம், அதைக் கவர்ச்சியாக்கி அளிக்க கற்றிருக்கவில்லை அவள்; கற்பு இருந்தது கண்ணகியிடம் அதைக் காணிக்கையாக்கிக் கணவற்குக் காட்டக் கற்றிருக்கவில்லை அவள்; அன்பு உள்ளம்—அரும்பெறற் குணங்கள் பண்பமைந்த சொற்கள்—பணிவு நடை இத்தனையும் இருந்தும் கணவனைத் தன் பால் ஈர்க்கும் கவர்ச்சியை அவள் பெற்றிருக்கவில்லை. ஆனால் மாதவியோ...அழகு நடைகாட்டி ஆடும் ஆட்டத்திலே—பண் இசைத்துப் பாடும் பாட்டிலே; ஆடவர் உள்ளம் கவரும் அழகுக் கவர்ச்சியிலே —இன்சொலிலே — எழிற்பார்வையிலே கவர்ச்சி அமைந்த காதல் தெய்வமாய் கலைச்செல்வியாய் இருந்தாள். கோவலன் உள்ளம் காதலை ஏற்றது....கட்டுப்பாட்டை எதிர்த்துக் கடிமணத்தைத் துறந்தது....கண்ணகி கலங்கினாள்....கலங்கினாள்....கணவனைப் பிரிந்து.......மாதவி மகிழ்ந்தாள் மகிழ்ந்தாள் மனமொத்த மணவாளனைப்பெற்று....

மாடலன்: மணம் புரிந்த மனைவியை மறந்து மாதவியை நாடினான் கோவலன்...

மகிழ்வூட்டி: ஆமாம்! மாமறை பார்ப்பான் மறைவழி காட்டத் தீவலம் செய்த அந்தத் திருமணம் நன்மணமாகவில்லை ஏன்? மனமொவ்வா மணம்—வடவர் தம் குணம். இருமனம் ஒன்று சேர்ந்ததன்றோ திருமணம். அதன் பெருமையை அறியாததால் தீந்தமிழர் காதல் திருமண முறையை இகழ்ந்ததால்....அவர்கள் வாழ்க்கை அழிந்தது; அழிந்தது; அடியோடு அழிந்தது.

வில்லவன்: கன்னித் தமிழரை இகழ்ந்தவர் தம் முடித்தலை கல்சுமக்கும் இந்த நேரத்திலே—வண் தமிழர் பண்பாட்டை மறந்து வடவர் பண்பாட்டை ஏற்றுப் புரிந்த மணவாழ்க்கை பிணவாழ்க்கையானதைக் கேட்கின்றோம்! வருந்துகின்றோம் இனியாவது இந்த உலகம் உணரட்டும்! தமிழ்நாட்டை தமிழரை—தமிழர் பண்பாட்டை தாய்மொழியாம் தமிழ் மொழியை இகழ்ந்துரைத்த எவரும் இகழ்ந்த யாரும் வாழமுடியாது....என்பதை இந்த வையகம் உணரட்டும்!

வடவர் கொள்கை வண் தமிழ் நாட்டார் வாழ்விலே வளங்குன்றச் செய்து விட்டது.

மகிழ்வூட்டி: ஆம்! நான்மறை நெறியுணர்ந்து அதனை நன் மறை என ஓதி, தீவலம் செய்து திருமணம் புரிந்த கண்ணகி கோவலன் கதி என்னவாயிற்று? என்பதை நாம் உணரவேண்டாமா? நல்ல தமிழ்ப்பண்பாட்டை ஏற்க வேண்டாமா? என்று அடிகள் கூறிய அந்தச் சொற்கள் இன்னும் அடியேன் செவிகளைவிட்டு நீங்கவில்லை.

செங்: மாடல!

மாடலன்; வேந்தே......மாதவி வயத்தனாய் மதி மயங்கிய கோவலன் காதல் வாழ்வில் கண்ணகியை மறந்தனன் அன்றொரு நாள் பூம்புகாரிலே இந்திரவிழா—அன்று கடற்கரைச் சோலையிலே......

## காட்சி 29

[இடம்:— கடற்கரைச் சோலையில் மாதவியும் கோவலனும்]

மாதவி: அன்பரே! அதோ......! அடுத்தடுத்துத் தோன்றும் அந்த அலைகளின் இன்னொலி.......!

கோவலன்: நமது இன்ப வாழ்வின் பெருக்கத்தை எடுத்துக் காட்டி இன்பகீதம் இசைக்கின்றன........!

மாதவி: அதோ அங்கே! சீறிவரும் சிற்றலைகளை அந்தப் பேரலைகள், சிதறச் செய்கின்றனவே....அஃதேன்?

கோவலன்: ஓ.......! அஃதா? நம்மை நோக்கிச் சீறிவரும் துன்பங்களும் நமது பேரின்பப் பெருக்கைக் கண்டு பிறப்பிடம் தெரியாமல் போய் மறையும் என்பதை அறிவித்துச் செல்கின்றன!

மாதவி: அதோ! ஒரு மணல் வீடு! அலைகள் நெருங்கி மோதுகின்றன பாருங்கள்!........ஐயோ! என்ன? அந்தச் சிறு வீடு அழிகின்றதே! கட்டியவர் கண்டால் வருந்துவரே! ஐயையோ! அழிந்தே போய் விட்டதே!

கோவலன்: அமைக்கத் தெரியாதவர்கள்; அலைகடல் ஓரத்திலே அழகிய சிறு வீட்டை அமைத்திருக்கின்றனர். மணல் வீடு தானே!...அதனால்...

மாதவி: அதற்குச் சொல்லவில்லை......அலைகளால் மணற் கோட்டை அழிகின்றதே....அதுபோல் நமது மனக் கோட்டையும் அழிந்துவிடுமோ! என்ற நடுக்கம் என் மனத்திலும்........!

**கோவலன்:** மாதவி! உன் மனநிலை சரியில்லை! மகிழ்வோடிரு! கானல் நீரல்ல: நமது காதல் வாழ்க்கை! கான்யாற்று நீர்-வற்று தது....வளங்குன்றுதது...நமது காதற் கோட்டை கற்கோட்டை மாதவி!

**மாதவி:** கற்பனைக் கோட்டையாகி விட்டால்...ஆ...(மயங்கிய நிலையில் கோவலன் மீது சாய்கின்றாள்)

**கோவலன்:** கருவுற்றிருக்கும் நீ கவலை கொள்ளல் தகுமோ! எங்கே எழுந்திரு! (மாதவி எழுகின்றாள்) அன்பே! அமுதே! ஆரணங்கே! இன்பக் கனிரசமே! எழிலூட்டும் பாவையே! கண்ணே! மணியே! கருவிழியே!

**மாதவி:** என்றெல்லாம் புகழ.......

**கோவலன்:** ஏற்ற சொற்களைத் தேடித் தேடி ஏங்குகின்றேன்! ஏங்குகின்றேன்! ஏங்கித் தவிக்கின்றேன்! மாதவி!

**மாதவி:** ஏக்கத்தை உண்டாக்கிய அந்த எழிலரசிதான் யாரோ! (பிணங்குதல்)

**கோவலன்:** வேறு யார்? என் மாதவியே தான்!

**மாதவி:** அவள் எங்கே இருக்கின்றாளாம்!

**கோவலன்:** அவள் இல்லாத இடம் ஏது? எங்கும் தான் இருக்கின்றாள்!

**மாதவி:** இங்கே! இந்த கடற்கரைச் சோலையில்.......

**கோவலன்:** இங்கும்தான் இருக்கின்றாள். அந்த எழிலோவியம் அங்கும்தான் இருக்கின்றாள்!

**மாதவி;** அப்படியென்றால்....(சிந்தித்து) எங்குமா இருக்கின்றாள்?

**கோவலன்:** ஆமாம் மாதவி! ஆமாம்! நீ எங்கும்தான் நிறைந்திருக்கின்றாய்! எங்கும்தான் நான் உன்னைக் காண்கின்றேன்!

**மாதவி:** என்னையா? எங்குமா?

**கோவலன்:** ஆமாம்! நீல மலரிலே உன் நீள்விழியைக் காண்கின்றேன். கொவ்வைப் பழத்திலே உன் செவ்விதழைக் காண்கின்றேன்.......

**மாதவி:** ஓகோ! கற்பனையிலா?

**கோவலன்:** இல்லை. இல்லை! கார்மேகத்திலே உன் கருங் கூந்தலைக் கண்டேன்! கன்னித் தமிழிலே உன் இன்மொழியைக் கேட்டேன். விண்மதியிலே உன் பொன் முகத்தைக் கண்டேன்: மின்னலிடையே உன் நுண்ணிடையைக் கண்டேன்.

மாதவி : ஓகோ! இத்தனையும் கண்டீர்களா?

கோவலன் : ஆமாம்! கண்ணாடிக் கன்னங்கள்; கருத்தை யீர்க்கும் கவர்ச்சி; பொன்னின் மேனி; புதுமைப் பொலிவு; மயிலின் சாயல்; மாங்குயிலின் இன்னோசை; அன்ன நடை; மின்னல் சடை.

மாதவி : போதும்! போதும்! இவ்வளவுதானா! இன்னும்

கோவலன்: இருக்கின்றது மாதவி! ஆடும் ஆட்டத்திலே! அழகுக் கவர்ச்சியிலே.......பாடும் பாட்டிலே! பண்ணிசைக்கும் மொழியிலே!

மாதவி : (மாதவி தன் தோழி வசந்தசேனையிடமிருந்து யாழினைப் பெற்றுக் கோவலன் கையில் கொடுத்து) எங்கே பண்ணிசைத்துப் பாடுங்கள்!

கோவலன் : நான் பாட வேண்டுமா? கவிஞன் அல்லவே! நான் பாடுவதற்கு....!

மாதவி : கவிஞனாகப் பாட வேண்டாம்! என் காதலனாகயிருந்து பாடுங்களேன்!....பாட மாட்டீர்களா? பாடுங்கள் என்றால்....(ஊடியவளாய் ஒரு புறமாகச் சாய்கின்றாள்)

கோவலன் : அதற்குள் ஊடலா...? இதோ....(யாழினை மீட்டுகின்றான்)

திங்கள்மாலை வெண்குடையான் சென்னி செங்கோலதுவோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்!
வங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி!

பொழில்தரு நறுமலரே! புதுமணம் விரிமணலே!
பழுதறு திருமொழியே! பணைஇள வனமுலையே!
முழுமதி புரைமுகமே! முரிபுருவில் இணையே!
எழுதரும் மின்னிடையே! எனையிடர் செய்தவையே!

(சிலப்பதிகாரம்)

மாதவி : (உள்ளம் பேசுகின்றது) மயங்காதே மாதவி! மயங்காதே! கானல்வரியின் நாதம் காதிற்கினிய கீதமாயிருக்கலாம்! செந்தமிழ்ப் பண்ணிசை செவிக்கு இன்னமுதாய் அமையலாம்! அவற்றிலே மயங்கிக்கைப்பிடித்த காதலன் கருத்து என்ன என்பதை அறியாமலிருக்கலாமா? இஃதென்ன? கானல்வரிப் பாடலாமா? காதலியை நினைந்துருகும் காதல்வரிப் பாடலாமா? ஏன் பொருமுகின்றாய்! எங்கே நீ பாடு! காதலனை நினைந்து கானல்வரிப் பாடல் பாடு! உண்மையாகவல்ல! பொய்மையாகவே ஒரு பாடல் பாடு! அப்போது உன் காதலன் படும்பாட்டைப் பார்! உள்ளம். எல்லோருக்கும் ஒன்றுதான் மாதவி! ஒன்றுதான்! ஆடவரானால் என்ன? பெண்டிரானால் என்ன? (மாதவி மனத்தில் ஊடியவளாய் முகமலர்ச்

சியுடன்) எங்கே யாழினை இப்படிக் கொடுங்கள்! நான் இசைக்கின்றேன்!

கோவலன்: (யாழினைக் கொடுத்து) இதோ! இசை! எழுதாத சித்திரமே! இசை! எழில்மிகுந்த ஓவியமே! பாடு! கீதமினிய குயிலே! எங்கே உன் நாதத்தை எழுப்பு!

மாதவி: (பாடத் தொடங்குகின்ருள்) இதோ!

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடையது போர்த்து
கருங்கயற்கண் விழித்தொங்கி நடந்தாய் வாழி காவேரி!
திருந்துசெங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி!

கைதை வேலிக் கழிவாய் வந்தெம்
பொய்தல் அழிந்துப் போனுர் ஒருவர்
பொய்தல் அழித்துப் போனு ரவர்நம்
மையல் மனம்விட் டகல்வா ரல்லர்!

(சிலப்பதிகாரம்)

கோவலன்: (உள்ளம் கொதித்தான்....அதற்கு உரம் ஊட்டியது மாதவியின் பாடல்) என்ன! யான் கானல்வரி பாடினேன்! இவளோ! மேற்ருன் மேல் மனம் வைத்து காமவரி பாடுகின்ருள். மாயப் பொய்மொழி கூட்டும் மாயத்தாள்!....கோவல! பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கத்தைப் போற்றித் திரிந்தாயே! இப்போது புரிந்ததா?.......

கைவிடப்பட்ட கண்ணகி உன்னை நினைந்து கண்ணீர்க் கடலில் தவிப்பதைப் பார்! காத்துப் போற்றப்பட்ட மாதவி உன்னை மறந்து காதலன் வரவை எதிர்நோக்கி கானற்பரணி இசைப்பதைப் பார்! இப்போதாவது புரிந்ததா? அவள் வீட்டுக்காரி! இவள் வேசி! இன்னுமா இதனை நீ புரிந்து கொள்ளவில்லை.......

மாதவியை நம்பாதே! மதிகெட்டுத் திரியாதே! மானத்தை விற்காதே! போ...! போ...! காதற்கிழத்தி கண்ணகி கண்ணீர்க் கடலிலே நீந்திக் காத்துக் கிடக்கின்ருள் போ...! போ...! பெற்ற தாய் பெருந்துன்பக் கடலிலே மூழ்கி மகனே! மகனே என்றழைக்கின்ருள் ஓடு, ஓடு.......

கோவலன்: ஆம்! (கோவலன் மாதவியை பிடித்த கை நெகிழ்ந்தனனுய்ப் பிரிகின்ருன்)

மாதவி: அன்பே! ஏன் எழுகின்றீர்கள்! அன்பரே! எங்கே புறப்படுகின்றீர்கள்!

கோவலன்: சீ! மானங்கெட்டவளே! (விரைந்து நடக்கின்ருன்)

மாதவி: ஆ....! மானங்கெட்டவளா? ஐயோ! (மயங்கி வீழ்கின்ருள்)

## காட்சி 30

[சாலே வழியே கோவலன் தன் அகம் நோக்கிச் செல்கின்ருன்]

கோவலன்: கண்ணகி நல்லாளே மறந்தேன்! கட்டிய மனைவியைக் கைவிட்டேன்! பெற்றதாயைப்-பிறந்த பொன்னுட்டின் பெரும் பண்பை மறந்தேன்! அரும் பெறன் மனைவிக்கு அளித்தேன் துயரம்! அடைந்தேன் பெருந்துயர்! பெரு வணிகர் குடிக்கே பெரும்பழி சுமத்தினேன்! பெரும்பழி சுமந்தேன்!

மாதவி! மதி மோசக்காரி! கானல் வரிப்பாட்டிலே காதல் வரிப் பாடி கண்டவருக்கெல்லாம் கரம்நீட்டித்திரியும் களங்கத்தின் பேருருவே! கயமையின் பிழிவே! யாரை நினைத்துப் பாடினுய்! எவரை நினைத்து இசை எழுப்பினுய்! கன்னித் தமிழ் நாட்டுக் கற்புக்குக் களங்கம் விளைத்த கருநாகமே! (அழுதல்) முல்லை நகை காட்டி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்ளி! நல்லவளாய் நடித்து என் நலமெலாம் உண்ட நாசகாரி! அல்லும் பகலும் உன் அகம் காத்துக் கிடந்த என்னைத்தள்ளி நிறுத்தித் தக்கவனைத் தேடித் திரியும் தரித்திரத்தின் பேருருவே!

உள்ளமெல்லாம் கள்ளம் உடலெல்லாம் பூச்சு! நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே! ஐயோ! ஐயோ! (மனம் புழுங்குதல்)

கண்ணகி! கற்புக் கணிகலமே! கடைந்தெடுத்த நன்முத்தே! அற்பனுய் நடந்தேன்; அவமானம் அடைந்தேன்! உன்னைப் பிரிந்தேன் உனக்கே துரோகம் புரிந்தேன். என்னை மன்னித்து விடு. மங்கை நல்லாளே என்னை மன்னித்து விடு! இதோ வந்துவிட்டேன்! (விரைந்து நடக்கின்ருன்)

அடி மாதவி! மயக்கு மொழி பேசி மதியை மயக்கிய மாயக்காரி! அன்பு மொழி புகன்ருய்! அழகு நலங் காட்டினுய்! ஆடினுய்! பாடினுய்! என் அகமெலாம் கொள்ளை கொண்டாய்!

படமெடுத்தாடும் நாகத்தின் ஆட்டத்தைப் பரத நாட்டியம் என்றெண்ணினேன்! நஞ்சு கலந்த நாசகாரி! நின் மொழிகளை அஞ்சுகத்தின் கொஞ்சு மொழிகள் என்று எண்ணினேன்! ஏமாந்தேன்! நம்பினேன்! பண்பு இழந்தேன்! நல்லவளாய் நடித்தாய்........

(தொடரும்)




## 2

### இளங்கோ

அடடா! என்ன அழகாக அந்த மரம் வளர்ந்திருக்கிறது. எட்டி நின்று பார்த்தால் அதன் அமைப்பே ஒரு தனி அழகுதான். எத்தனை உயரம்; எத்தனை பருமன்! எவ்வளவு மணம் கமழும் பூக்கள்; காய்களை சுமக்க முடியாமல் கிளைகளெல்லாம் வளைந்து விட்டனவே என்று போன ஆண்டில் என்னைப்போல் எத்தனையோ பேர் அதைப் பார்த்துக் கூறினார்கள். அதன் கதி இப்படியா முடியவேண்டும்.

இந்த ஆண்டு கோடை விடுமுறைக்கு நானும் அக்காளும் அத்தானும் அந்த ஊருக்கு—நானும் அக்காளும் பிறந்து வளர்ந்த அந்த தஞ்சை நகருக்குச் சென்றிருந்தோம். அப்போது நான் அந்த இடத்திற்குச் சென்றேன். அங்கே அந்த ஓங்கி உயர வளர்ந்த மரம் இருக்கும் என்று கருதிக்கொண்டுதான் சென்றேன். எனக்கே வியப்பாகப் போய்விட்டது. அந்த இடம் காலியாகக் கிடந்தது. அந்த மரமே காணாமல் போய்விட்டது. பக்கத்தில் இருந்த பையனிடம் விசாரித்துப் பார்த்தேன். யாரோ ஒருவர் அந்த மரத்தை வாங்கிப் பலகை அறுக்கவேண்டும் என்பதற்காக வெட்டிவிட்டார்கள் என அறிந்தேன். எப்படியோ அந்த இடத்தில் வளர்ந்த அந்த மரம், யாரோ ஒருவருடைய தேவைக்குத் தன் உயிரைத் தியாகம் செய்துவிட்டது.

இந்த ஒரு ஆண்டிற்குள்ளாகவே அவ்வளவு பெரிய மரம், மறையும்படியான சூழ்நிலை அதற்கு ஏற்பட்டுவிட்டது. காலம் அவ்வ



ளவு விரைவாகத் தன் வேலையைச் செய்கிறது. அதற்கு மனிதர்கள் மட்டும் என்ன ஒதுங்கியா போய்விட முடியும்? இவ்வளவு தூரம் பேசவேண்டிய அவசியமே இல்லையே! என்னுடைய நண்பர் முத்து என்பவர் போன ஆண்டு தான் பி.ஏ. வகுப்பில் தேர்வு பெற்ருர்,

அவருக்கும் என்னுடைய ஊர்தான். இந்த ஆண்டு தொடக்கத்தில் அவருக்கும்— கும்பகோணத்தில் யாரோ ஒரு ஆசிரியருடைய மகளாம். அந்த அம்மாவுக்கும் திருமணம் நடந்தது. இப்போது அவர்கள் இருவரும் திருச்சியில் வசிக்கிருர்களாம். இதை அப்பா என்னிடம் சொன்ஞர். ஏ அப்பா! என்ன வேடிக்கை செய்கிறது இந்தக் காலம்! எங்கேயோ பிறந்து வளர்ந்த என் நண்பரை, எங்கேயோ படிக்கவைத்து எங்கேயோ பிறந்து வளர்ந்த ஒருத்தியை அவருடன் சேர்த்துவைத்து வேறு எங்கேயோ வசிக்க வைக்கிறது இந்தக் காலம்! என்ன என்ன வேலை செய்கிறது இந்தக் காலம்! எப்படி எப்படியோ, எந்தெந்த ரூபமாகவோ மாற்றித் தன் போக்கிற்கு இழுத்துக்கொண்டு போய்விடுகிறதே!

அப்படி இருக்கும்போது "நீ எவ்வளவோ மாறிவிட்டாயடா! முன்பு இருந்த மாதிரியாகவா இப்பொழுது இருக்கிருய்?" என்று அக்காள் சொன்னதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது.

இந்த கடந்துபோன நிகழ்ச்சிகள் எனக்கு திடீரென்று நினைவுக்கு வர அந்தக் காலண்டர்தான் அதற்குக் காரணம், காலண்டரின் முகப்பில் ஒரு பெரிய மரம் ஏனே வரையப்பட்டிருந்தது? அதைப் பார்த்ததும் இதை நினைத்துக்கொண்டேன். ஏன் அப்படி நான் நினைக்க வேண்டும்? மனதிற்குள்ள தனிப்பெருமை அதுதானே! எதை எதையோ பார்க்கிருேம், என்னவோ நினைக்கிருேம். யாரை யாரையோ காண்கிருேம், ஏதோ ஒன்றை எண்ணுகிருேம். இந்த எண்ணும் சக்தி இல்லையென்ருல் மனிதன் மனிதனுகவா வாழ முடியும்? இது

ஒருபக்கம் தள்ளுவோம். இன்று அக்காள் மேல் எனக்குச் சரியான கோபம்! என்னை ஏமாற்றியல்லவா எழுப்பி விட்டாள்.

நான் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தேன். அக்காளுக்கு என்னை ஏமாற்றிச் சிரிக்க வேண்டும் என்று தோன்றியதோ என்னவோ? மெதுவாக என் அறைக்கு 'உத்திரவின்றி' நுழைந்து, என் கையை 'நறு'க்கென்று கிள்ளினுள். நான் திடீரென்று விழித்துக்கொண்டேன்.

"என்னடா இது? கும்பகர்ணன் மாதிரி; எருமை குட்டையில் ஊருவது போல! மணி என்ன தெரியுமா? 8 மணி சங்கு ஊதிவிட்டது!" என்ருள் அக்காள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. 8-30 மணிக்கு தனி வகுப்பு இருக்கிறதே, அதனுல்தான்.

"என்ன அக்காள், மணி எட்டா? பொய்" என்றேன் நான்,

"ஆமாம். நான் சொல்வது பொய்தான். எதிர் வீட்டு ராஜம், உன்னேடு படிக்கிருளே, அவள் குளித்துவிட்டு, இங்கே வந்துவிட்டாள். நீ இன்னும் தூங்கு. தாலாட்டுப் பாட்டு ஒன்று பாடட்டுமா?" என்று என்னைப் பார்த்துக் கேலி செய்தாள் அக்காள். என் களைப்பு அக்காளுக்கு எங்கே தெரியப் போகிறது? வெப்பம் மிகுந்த நாட்டில்....... எல்லாம் தொந்தரவுதான். அக்காளுக்கு அது தெரிந்தால்தானே! நான் என்னமோ வேண்டுமென்று தூங்குவதாக நினைத்து விட்டாள். என் சோர்வு என்னை எழ விட்டால்தானே! அக்காளின் பதிலைக் கேட்டவுடன் எனக்குச் சிரிப்பே வந்துவிட்டது. அர்த்தமில்லாமலா அக்காள் பேசுவாள்?

"ஏனக்கா, பையனுக இருந்தால் பொன்முடி; பாப்பாவாக இருந்தால் பூங்கொடி, என்ன சரிதானே அக்கா...." என்றேன் நான். அக்காளுக்கு ஆசைக் கோபம் வந்தது.

"டேய் இளங்கோ, இனிமேல் இப்படிப் பேசினே...?" என்ருள்.

"அது சரி அக்கா, ராஜம் வந்ததாகச் சொன்னிங்களே, எதுக்கு வந்தாள்?"

"ஒரு சந்தேகம் கேட்க வந்தாள். அப்படியே உன்னையும் வந்து பார்த்தாள். நீ தூங்குவதைப் பார்த்து "இப்படியா தூங்குவது?" என்று சிரித்தாள்".

மிக ஒழுங்குதான். தூங்கும்போது அவளை இங்கு ஏன் அழைத்து வந்தாய்?"

"உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டாமா? உன் பேச்சென்ன! உன் எழுத்தென்ன! உன் தூக்கமென்ன!" என்று சொல்லி கலகலவென்று சிரித்தாள். என்னைப் பார்த்துச் சிரித்தால் எனக்குக் கோபம் வராதா? அக்காளாக இருந்ததால் சும்மா இருந்தேன். படுக்கையை விட்டு எழுந்து ஓடி மணியைப் பார்த்தேன்.

அப்பொழுதுதான் மணி 6-30ஐத் தாண்டியது ; திரும்பினேன், அங்கே ராஜம் இல்லை. எல்லாம் ஏமாற்றம்! அக்காள் செய்த மாபெரும் சூழ்ச்சி, என்னை எழுப்புவதற்காக. ஒரு பக்கம் அக்காள் மீது எனக்குக் கோபம் இருந்தாலும், நான் விரைவில் எழுந்து படிக்கவேண்டும் என்பதற்காக இவ்வளவு பொய் சொல்லி, என்னை ஏமாற்றி வெற்றி பெற்ற அக்காள்மீது மறு பக்கம் அன்புதான்.



அத்தானும் நானும் சாப்பிடுவதற்காக உட்கார்ந்தோம். அக்காள் கையில் தட்டோடு நின்றுகொண்டிருந்தாள்.

பரிமாறும் போதே வேண்டுமென்றே அத்தான் அக்காளைப் பார்த்து மெல்ல இதழ் ஓரத்தில் சிரித்தார். அக்காளும் அத்தானைப் பார்த்து சிரித்திருப்பாள், நான்தான் அங்கிருந்து அதைக்கெடுத்தேன். அக்காளுக்கு என்மேல் எவ்வளவு கோபம் வந்ததோ? இனிமேல் அத்தானுடன் இருந்து சாப்பிடுவது மிகமிகத் தவறு என்பதை உணர்ந்தேன். மெதுவாய்ச் சொன்னேன்.

"அக்கா, நாளையிலிருந்து அத்தான் சாப்பிட்ட பிறகு நான்சாப்பிடுகிறேன்" என்றேன்.

"என் ?" என்று தெரியாதவள்போல் கேட்டாள். உள்ளத்தில் நான் சொல்வதுதான் 'சரி' என்று பட்டிருக்கும். இருந்தாலும் தம்பியிடம் அதைஎப்படிச் சொல்வதாம் !

இந்த நேரத்தில் எங்கள் தெருவின் கோடியிலிருந்து "ஐயோ.... ஐயோ !' என்ற பரிதாபகரமான குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து யாரோ தொண்டை கிழியக் கத்துவதும் கேட்டது. நானும் அத்தானும்

சாப்பிடுவதை அப்படியே நிறுத்திவிட்டோம். அக்காளும் உற்று அதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அது என்ன சத்தம் என்றறிய நானும் அத்தானும் கையை அலம்பிக்கொண்டு வாயிலுக்கு வந்தோம். அக்காளும் எங்களுடன் வந்தாள்,

எங்கள் தெருவின் கோடியில் ஒரே மக்கள் கூட்டம்: பெரிய பரபரப்பு! முதலில் ஏதோ அடிதடி சண்டையாக இருக்கும் என்று நான் நினைத்தேன். என்ன விஷயத்திற்காக இப்படி அடித்துக்கொள்கிருர்கள். வீதியில் போட்டு குழப்புகிருர்களே என்று என் மனம் எண்ணிக் கொண்டிருந்தது.



"குப்பம்மா, என்ன கூட்டமங்கே, போய்ப் பார்த்து விட்டு வாயேன்" என்று வேலைக்காரியைப் பார்த்துக் கேட்டாள் அக்கா. குப்பம்மாளும் வேலை வெட்டிகளையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு போய், சிறிது நேரத்திற்குப்பிறகு திரும்பி வந்தாள். ஏனே அவள் முகம் விகாரப் பட்டிருந்தது. நடையிலே சிறிது சோர்வு காணப்பட்டது.

வந்த குப்பம்மாள் சொன்னுள்:

"அதோ தெரியுதேம்மா, அந்தக் கோடி வீடு. அந்த வீட்டிலே ஒருவர், பாங்கியிலே வேலை செய்கிருரே தெரியுமாம்மா உங்களுக்கு?"

அக்கா பேசாமல் இருந்தாள். உடனே அதை விளக்கவேண்டுமென்று,

"அவர்தான் அக்கா. சோமசுந்தரம் என்று பெயர். இங்கு அடிக்கடி வருவார்களே, அவர் மனைவி—ஒல்லியா—கொஞ்சம் மாநிறமாய்.......!"

"ஓ! தேவகியா....?" என்றாள் அக்காள்.

"ஆமாம் அம்மா! அந்த அம்மாவே தான். அந்த அம்மாவுக்கு ஒரு பிள்ளை இருக்கானே, தெரியுமாம்மா?" என்றாள் குப்பம்மா. அக்காவுக்குத் தெரியாததுபோல் விழித்தாள். உடனே நான் சொன்னேன்.

"அவன்தானக்கா! சுருட்டை மயிர்! பாட்டுபாடிக்கொண்டிருப்பானே! மூன்றும் நாள்கூட இங்கே வந்தானே!"

"ஆமாம் அவன் பெயர்?" என்றாள் அக்கா.

"சுந்தரம்" என்றேன் நான்.

"அவனா? அவன் நல்லவனாயிற்றே, அவனுக்கு என்ன.......?" என்று குப்பம்மாவைப் பார்த்து அக்காள் கேட்டாள்.

"அவன்தானம்மா அநியாயம் செய்துவிட்டான்."

"அநியாயமா? என்ன அது? சொல்லு குப்பம்மா. சீக்கிரம் சொல்லு..."என்று அக்காள் பரபரப்போடு கேட்டாள்.

"அந்த கொடுமையை எப்படியம்மா சொல்லுவது? அவன் செய்யக்கூடிய செயலாம்மா அது? ஐயோ கடவுளே! அவன் கதியை—செயலைப் பாருங்கம்மா. அம்புஜம் தெரியுமே உங்களுக்கு, அவளோடு என்னென்னமோ கெட்ட வார்த்தைகள் பேசினானும்.......!"

"ஆ...!" என்று அக்காள் ஆச்சரியத்தோடு நெற்றியைச் சுளித்தாள். "சுந்தரமா அப்படிச் செய்தான்?" என்று வெளியே சொல்லாமல் உள்ளத்திலேயே அச்சங்கொண்டேன் நான். "அந்தக் கழுதையா இப்படிச் செய்தான்?" என்று அத்தான் ஆத்திரங்கொண்டார்.

"அப்புறம் என்ன?.' என்று அத்தானே சுறுசுறுப்பாகக் கேட்டார்.

"அம்புஜம் போய் வீட்டில் நடந்ததைச் சொல்லிவிட்டாள்! அவ்வளவுதான். அம்புஜத்தின் அண்ணனும், அப்பனும் கையில் கம்போடு வெளியே வந்தார்கள். உள்ளே புகுந்து சுந்தரத்தைப் பிடித்திழுத்து கண்டபடி அடித்தார்கள். அவன் அண்ணன் ஒரு பெரிய முரடன், வயிற்றிலேயே அவன் உதைத்தான், யாருமே தடுக்க முடியவில்லையம்மா பாவம்! சுந்தரத்தால் என்ன செய்ய முடியும்? முகமெல்லாம் இரத்தம்! பாவம்! தேவகி அம்மாளும் அவரும் அவமானம் தாங்காமல் அழுததைப் பார்த்தேனம்மா."

அதற்கு மேலும் என்னால் அங்கு நிற்க முடியவில்லை. ஆத்திரத்தில் அறிவிழந்து சுந்தரம் இப்படி மாட்டிக் கொண்டானே! அட பாவமே! எவ்வளவு நல்லவன்! இந்த பாழும் உணர்ச்சி அவனைப்போய் ஆட்கொண்டதே என்று எண்ணி அவன் நிலைக்காக இரங்கினேன். சுந்தரத்தைப் பார்க்க எண்ணி கீழே அடி எடுத்து வைத்தேன்.

"இளங்கோ, அங்கே போகாதே" என்றாள் அக்காள்.

"ஏன், அக்கா?" என்றேன்.

"சொல்வதைக் கேள், வேண்டாம்" என்று தடுத்தாள் அக்கா.



சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்கள்
சென்ற திங்கள் நடத்திய கண்காட்சியின் சில பகுதிகள்.





## பொன்னி

### வரி விளம்பரங்களுக்கான விகிதம்

நன்றியறிவிப்பு, திருமணம், தேவை, விற்பனை, முகவரி மாற்றம், பிறப்பு, புத்தகங்கள் மற்றும் வியாபாரச் சிறு விளம்பரங்கள்

**வரி ஒன்றுக்கு அணா 6**

4 வரிகளுக்கும் அதற்குக் குறைந்ததற்கும் ரூ. 1-8-0

C/o முகவரி கொடுத்தால் திருப்பி அனுப்ப விளம்பரம் 1-க்கு அணா 8.

## வேலை தேவை

S. S. L. C. தேர்வு பெற்று டைப் ரைட்டிங், சுருக்கெழுத்து பயின்றுவரும் பதினெட்டு வயது பூர்த்தியடைந்த ஒரு ஏழை முஸ்லீம் வாலிபனுக்கு வேலை தேவை.

வே. தே. 16.

B. A. படித்தவரும், தற்சமயம் ஒரு கடையில் வேலை செய்பவருமான அன்பர் ஒருவருக்கு ஒரு நல்ல வேலையும் போதிய ஊதியமும் அளிக்கவேண்டுகிறார்.

வே. தே. 17.

வயது 21. படிப்பு ஐந்தாவதுவரை. பல இடங்களில் வேலைபார்த்த அனுபவமுள்ள அன்பருக்கு எந்த வேலையும், தகுந்த ஊதியமும் வேண்டுமென விழைகிறார்.

வே. தே. 18.

வயது 20. உயரம் 5½' எடை 96 பவுண்ட். தமிழும் ஆங்கிலமும் சுமாராக எழுதப் படிக்கத் தெரியும். விரும்பும் வேலை ஆசிரியர்.

வே. தே. 19.

வயது 26. B. A. வரை படித்தவர். எந்த வேலையும் மேற்கொள்ளத் தகுதியும் நம்பிக்கையுமுள்ளவர் உழைப்பும் அதற்குரிய ஊதியமும் தர வேண்டுகிறார்.

வே. தே. 20.

E. S. L. C. வரை படித்தவர். தையல் வேலையுந் தெரியும். அலுவலக ஆபீசிலாவது டைலர் ஷாப்பிலாவது வேலை வாங்கித்தர வேண்டுகிறார்.

வே. தே. 21.

S. S. L. C. தேர்ச்சி பெறவில்லை. வயது 20. தேகாரோக்கியம் உடையவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவருக்கு நாற்பது ரூபாய் சம்பளத்தில் வேலை தேவை.

வே. தே. 22.

S. S. L. C. தேர்ச்சி பெற்றவர். டைப் அடிக்கத் தெரியும். தந்தையின் தொழிலான இன்ஜீனியரிங் ஒர்க் கண்டிராக்டில் கொஞ்சம் அனுபவம் உண்டு. வயது பதினெட்டு. இந்தத் தகுதியுள்ள தோழருக்கு வேலை தேவை.

வே. தே. 23.

S. S. L. C. (இலங்கை) தேர்ச்சி பெற்ற அன்பர் ஒருவருக்கு ஏதாவது சினிமா தியேட்டரிலோ, நிர்வாகத் துறையிலோவேலை தேவைப்படுகிறது

வே. தே. 24.

எந்த வேலையையும் மேற்கொள்ளத் தயாராயிருக்கும் இளைஞரொருவருக்கு வேலை தேவை.

வே தே. 25.

S. S. L. C. லோயர் கிரேட் டைப் ரைட்டிங் தேர்ச்சி பெற்றவரும், தமிழார்வமும், கதை, கட்டுரை எழுதும் திறமையுமுள்ள ஏழை இளைஞரொருவர்க்கு வேலை தேவை.

வே. தே. 26.

வயது 24. கதை, கட்டுரை வரையும் ஆற்றலுள்ள ஒருவருக்கு பத்திரிகைத் துறையில் புரூப் ரீடராகவோ, வேறு எவ் வேலையிலோ பணியாற்ற ஆவல்.

வே. தே. 27.

வயது 24. மூன்றும் பாரம் வரை படித்தவர். பல கடைகளில் கணக்கு எழுதும் வேலை பார்த்தவர். விற்றுவரவு, வசூல் முதலிய வேலைகளில் அனுபவமுள்ளவர். அத்துடன் கதை, கட்டுரை வரையும் ஆற்றலுள்ளவர். இந்த அன்பருக்கு எந்த ஊராயினும், எவ்வேலையாயினும் தேவை.

வே. தே. 28.

T. S. L. C. பயின்று பரீட்சையில் தவறியவர். ஆசிரியர் வேலை அல்லது வேறு எந்த வேலையாயினும் சரி. சம்பளம் ரூ. 50-க்குக் குறையாமல் கோவை மாவட்டத்திலுள்ள ஊர்களில் தேவை.

வே. தே. 29.

# கவிமணியின் கருத்துக்கள்

"சோமலெ"

[1-10-1954-இல் சென்னை ஒய்.எம். சி.ஏ. பட்டிமன்றத்தில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் பேசியது.]

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுடைய புலமையைப் பற்றியும், அப் புலவர் பெருமகன் தந்திருக்கின்ற தமிழ்க் கவிதைச் செல்வத்தின் சிறப்பைப் பற்றியும், தலைவர் உயர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் விளக்கமாகவும் தெளிவாகவும் நமக்கு எடுத்துச் சொன்னார்கள். எனவே அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவன் என்ற அளவில் கவிமணியின் குணச் சிறப்புக்கள் சிலவற்றையும் வேறுபட்ட பிரச்சினைகளைப் பற்றி அவர்களது கருத்துக்கள் சிலவற்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

கவிமணி அவர்கள் அரசியல் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து வந்தார்கள். ஆனால் எந்த அரசியல் கட்சியையும் அவர்கள் ஆதரித்ததில்லை. எந்தக் கட்சியின் கருத்தாக இருந்தாலும், சிறந்த கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் இயல்பு அவர்களிடம் இருந்தது.

கவிமணி சமயப்பற்று நிறைந்தவர். ஆனால் அது சடங்குப் பற்றாகவோ, மூட நம்பிக்கைகளை முற்றிலும் ஆதரிக்கும் பழமைப் பற்றாகவோ இருந்ததில்லை. கோவில்களில் தமிழ் முழங்க வேண்டும், கலைகள் வளரவேண்டும், சிற்றின்ப உணர்ச்சியை ஊட்டும் சிற்பங்கள் நீக்கப்பட வேண்டும்; இச் சீர்திருத்தங்களைச் செய்ய இயலாவிடில், கோவில்களைப் பெரியார் ஈ. வே. ரா. அவர்களிடம் ஒப்படைத்து விடலாமென்று கவிமணி பல தடவை என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

கவிமணி பதவி விரும்பாப் பண்பினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் கௌரவத் தமிழ்ப் பேராசிரியராக அவரை நியமிக்க விரும்பினார்கள். ஓராண்டில் 4, 5 சொற்பொழிவுகள் மட்டும் செய்து மூவாயிரம் ரூபாய் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது ஏற்பாடு. இந்த வேண்டுகோளுக்குக் கவிமணி இசையவில்லை. கவிமணி இதை ஏற்றுக்கொண்டிருந்தால் அவர்கள் தொடர்பால் பல்கலைக் கழகத்திலுள்ளவர் பெரும் பயன் அடைந்திருப்பர்.

சென்னை அரசியலார் தமிழ் மொழிக்கு அவைக்களத்துப் புலவர் (ஆஸ்தான கவிஞர்) நியமிக்கப் போகிறார்கள் என்று தெரிந்த உடனேயே தாம் அப்பதவியைப் பெற விரும்பவில்லை என்பதைக் கவிமணி தெளிவாகத் தெரிவித்து விட்டார். அவைக்களத்துப் புலவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் நியமிக்கப்பெற வேண்டுமென்றும் ஐந்து ஆண்டு காலத்துக்கு மட்டும் நியமனம் செய்வது தவறு என்றும் அவர்கள் கூறினார்கள். சிறந்த கவிகளை அவைக்களத்துப் புலவர்களிடமிருந்து எதிர்பார்ப்பதற்கில்லை என்றும் இதற்கு இங்கிலாந்திலுள்ள அவைக்களத்துப் புலவர்கள் சான்றாக விளங்குகிறார்கள் என்றும் சொல்லுவார்கள். ஆங்கில இலக்கியத்தில் உள்ள உயர்ந்த

பாடல் ஒன்றுகூட அவைக்களத் துப் புலவரால் இயற்றப்பெற வில்லை. அதற்குக் காரணம், அவர்கள் மன்னர்க்கு முடிசூட்டும் போதும், மன்னர் பிறந்த நாளி லும், இறந்த நாளிலும்—இவ்வா ருக, சில சடங்குகளுக்குப் பாடு வதே வழக்கமாக அமைந்துவிட்ட தாகும் என்று தம் கருத்தை அவர்கள் மேலும் விளக்கமாகத் தெரிவித்தார்கள்,

தமிழ் வளர்ச்சிக் கழகமோ, பிறரோ நடத்தும் பரிசுத் திட்டங் களுக்கு அவர்கள் நூல்களை அனுப்பியதில்லை; அனுப்ப வேண்டாமென்று உறுதியாக முன்கூட்டியே சொல்லிவிடுவார் கள்.

கவிமணி பல ஆண்டுகளாக ஒரு வேளைக் கஞ்சிதான் உட் கொண்டு வந்தார்; அவரு டைய உடையும் ஆடம்பரமற் றது; நினைவாற்றல் வியக்கத் தக்கது; பொறுமை எல்லையற் றது; அடக்கம் பேரறிஞர்களி டையே காண்பதற்கு அரியது,

கவிமணி மிகச் சுறுசுறுப்பா னவர், கடிதங்களுக்கு உடனுக் குடன் பதில் எழுதுவார். விருந் தினரை உபசரிப்பதில் அவருக்கு ஈடுபாடு மிகுதி. அறிஞர்கள் பலர் தம் குடும்பச் செயல்களைச் செவ்வையாகச் செய்வதில்லை; கவிமணி இதற்கு மாறுபட்டவர். அவர் காலத்திலேயே அவர் பயன்படுத்திய நூல்களையெல் லாம் வடசேரி கவிமணி நிலையத் திற்கு அன்பளித்து விட்டார். எஞ்சிய ஏடுகளையும், ஆராய்ச் சிக் குறிப்புக்களையும் பேராசிரி யர் வையாபுரிப் பிள்ளை அவர் களுக்கு வழங்கிவிட்டார். நூல் களின் உரிமைகளை மருகர் குமார சாமிப் பிள்ளை அவர்களுக்குக் கொடுத்துவிட்டார். மறைமலை யடிகள், திரு. வி. க. ஆகியோ ருக்குப் பின்னர் அவர்களுடைய குடும்பங்களில் நடந்த நிகழ்ச்சி களை ஒப்புநோக்குவாருக்கு யான் கூறியதின் உட்பொருள் விளங் கும்.

கல்வெட்டு ஆராய்ச்சியில் கவி மணிக்கு அளவுகடந்த உற்சாகம் உண்டு. கன்னியாகுமரிக் கோவில் சுவரிலுள்ள தமிழ்க் கல் வெட்டுக்களை மறைப்பதற்காக, சுவரைப் பூசுவதற்கு மலையாள அரசியலார் முயன்றபோது அதைத் தடுத்தவர் கவிமணி.

புரவலர்களிடமிருந்து பரிசு பெறுவது புலவர் இயல்பு; இவ் வகையிலும் கவிமணி பிற புல வர்களினின்றும் மாறுபட்டவர். 1943-ல் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் தலைமையில் கவிமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப் பெற்றது; மறுநாள் ராஜா அவர்களுடைய மாளிகை யில் கவிஞருக்கு விருந்து நடை பெற்றது. விருந்துக்குப் பின் ஓர் உறையில் பரிசிலை வைத்து ராஜா கவிமணியிடம் கொடுத் தார். உடனே அதை மறுப்பது பொறுத்தமில்லை என்று எண்ணி கவிமணி அதை மறுநாள் அரச ருக்குத் தக்கார் வாயிலாகத் திருப்பியனுப்பினர். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரிடம் பரிசில் பெற முயன்றவர் பல்லா யிரவர்; அவர் கொடுத்ததை ஏற்க மறுத்தவர் கவிமணி ஒரு வரே. இந்நிகழ்ச்சி ராஜா அவர் களுக்கு வியப்பைத் தந்தது; உரிய பொருளை வெள்ளிப் பாத் திரங்களாக மாற்றினர்; கவி மணியின்நண்பர்களான டி.கே.சி.

திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை முதலிய தமிழன்பர் சிலர் வாயிலாக அனுப்பி பாத்திரங்களையாவது கவிமணி ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார் ராஜாசர். இதை மறுக்க இயலாத கவிமணி ஒரு தந்திரத்தைக் கையாண்டார். அவற்றை ஏற்றுக்கொண்டு தமது பணத்திலிருந்து உரிய தொகையைத் திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி, ஆண்டுதோறும் பி. ஏ. வகுப்பில் முதல் தகுதிபெறும் மாணவருக்குப் பரிசு கொடுப்பதற்கான திட்டம் ஒன்றை வகுத்து, மூலதனம் வழங்கினார்.

கவிமணி நாஞ்சில் நாட்டிலுள்ள தமிழாசிரியர் பலருக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறார். அவருடைய அறிவுரையைப் பின்பற்றியே "சுசீந்திரம்", "சேரநாடும் தமிழும்" என்ற அரிய ஆராய்ச்சி நூல்களை அன்பர் சிலர் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இவ்வகையில் பார்க்கும்போது, கவிமணி ஒரு புலவர் மட்டுமல்ல; புலவர்களை ஆதரித்த புரவலரும் ஆவார்.

கவிமணியின் கருத்துக்களைச் சிலர் திரித்தும் திருத்தியும் கூறி வருவது வியப்பாக இருக்கிறது. இலக்கண அறிவு வேண்டுவதில்லை என்று கவிமணி ஒருபோதும் தெரிவித்ததில்லை. இலக்கண விதிகளுக்கு மாறுபாடு இல்லாத வகையிலேயே அவருடைய கவிதைகள் யாவும் அமைந்துள்ளன.

டி. கே. சி. கம்ப ராமாயணத்தைப்பற்றி தெரிவித்த கருத்துக்களை, கவிமணி ஆதரித்ததில்லை. இதைப் பலமுறை அவர் என்னிடம் கூறியிருக்கிறார். கவிமணி அவர்களுடைய பாடல்களில்

"புன்னகை பூத்துப் பொலியும்
முகத்தழகன்"
"என்னருமை நண்பா!
இனிய கலைரசிகா!"
"அன்னைபோ லென்னை
அருவியில் நீராட்டி
இன்னமுதும் பக்கத் திருந்தூட்டித்
—நன்னெடு
தங்குதங் கென்றுசொன்ன
தங்கக் குணத்தானை"

என்று டி. கே. சி.யின் உருவப் பொலிவு, நட்பு, குணச் சிறப்பு ஆகியவற்றையே பாடுவார்கள். தமிழ் இலக்கியத்தில் திறனாய்வாளராகத் தோன்றியவர் டி. கே. சி.யே என்றும் அவரது திறனாய்வு முடிவுகளைப் பற்றிக் கருத்து வேறுபாட்டிற்கு இடமுண்டு என்றும் கவிமணி சொல்லுவதுண்டு.

தமிழில் பிறமொழிக் கலப்புக் கூடாது என்ற இயக்கத்தின் நோக்கத்தைக் கவிமணி ஆதரித்தார். ஆனால் "கோர்ட்டு", "சைக்கிள்", "மோட்டார்" போன்ற பல சொற்கள் நாடெங்கும் பரவி விட்டதால், இனி அவற்றை நீக்க முயலுவது வீண் வேலை என்பார். தமிழிசை இயக்கத்தை அவர் பெரிதும் ஆதரித்தார். பல்கலைக் கழகங்களில் தமிழ் வாயிலாகவே பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்று விரும்பினார். கல்வித் துறையில் அரசியல் தலைவர்கள் தலையிடுவதைக் கவிமணி விரும்பியதில்லை. "குமரன்" ஆசிரியர் சொ. முருகப்பா அவர்கள் தம் மகன் மலையாவில் படித்துக்கொண்டிருப்பதாகக் கவிஞரிடம் தெரிவித்தார்

அதைக் கேட்டுக் கவிமணி மகிழ்ச்சி அடைந்தார். "அங்கு தான் அரசியல் தலைவர்கள் தலையீடு இல்லாமல் கல்வி நிலையங்கள் நடைபெறுகின்றன, தொடர்ந்து அங்கேயே படிக்கட்டும், மேல் படிப்புக்கு இங்கிலாந்துக்குச் செல்லலாம்" என்று அறிவுரை கூறினர். ஹிந்தி மொழியைப் பள்ளிக்கூடங்களில் புகுத்துவது சில பைத்தியக்காரர்களின் செயல் என்று கவிமணி கருதினர்.

தமிழில் கீழ்த்தரமான பாடல்கள் வெளிவந்திருப்பதற்கு நமது பத்திரிகைகள்தான் காரணமென்று கவிமணி சொல்லுவார்கள். கவிதைஇயல்பையோ, யாப்பிலக்கணத்தையோ அறியாதவர் பத்திரிகைகளில் பணியாற்றும் வழக்கம் ஒழியவேண்டுமென்று விரும்பினர்கள்.

கவிமணி வீட்டிலிருந்த கடிதக் கட்டுக்களை யெல்லாம் ஒரு தடவை, நான் புரட்டிப் பார்த்தேன். ஒரு கடிதம் பல ஆண்டுகளுக்கு முன் நமது பட்டிமன்றச் செயலாளர் அன்புப்பழம்நீ எழுதியது. திருமணங்களில் மணமக்களை வாழ்த்தப் பயன்படும் முறையில் பெயர் குறிக்காமல் ஒரு பாடல் வேண்டுமென்று பழம்நீ கேட்டிருந்தார். கவிமணி ஒரு பாடலை அனுப்பியிருந்தார். பாட்டின் ஈற்றடியில் "முருகன் அருளால் வாழ்கவே" என்று இருந்ததைப் பழம்நீ விரும்பவில்லை. கிறித்தவர்கள், முஸ்லீம்கள் ஆகியோர் திருமணங்களிலும் பயன்படுவதற்கு ஏற்றவாறு பாடல் இருக்க வேண்டுமென்றும் பழம்நீ தெரிவித்திருந்தார். "Made to order Poetry" வராது என்றும் கவிஞன் தன் விருப்பப்படிதான் பாட இயலும் என்றும், எப்படி தான் தருகின்ற பழம் பிறர்க்குச் சுவையாக இருப்பதைப்பற்றி மாமரம் கவலைப்படுவதில்லையோ அதுபோலவே பிறரை வயப்படுத்துவதற்காக அவர்கள் விரும்பியவாறெல்லாம் ஒரு கவிஞன் பாட இயலாதென்றும் கவிமணி என்னிடம் கூறினர்கள்.

கவிமணி இயற்றிய பாடல்களில் மிகுதியானவை வாழ்த்துப்பாக்கள். "சந்ததமும் வாழ்க தழைத்து," "நித்தமும் வாழ்க நிலைத்து," "மண்ணுலகில் வாழ்க மகிழ்ந்து" என்ற ஈற்றடிகளை வைத்து, கவிமணி நூற்றுக்கணக்கானவர்களை வாழ்த்தியிருக்கிறார். இவ்வாறு வாழ்த்துப் பெற்றிருப்பவருள் சிலர், நிறைந்த தகுதிகளோ அன்றி இனிய இயல்புகளோ இல்லாதவராக இருக்கக்கூடுமே என்று ஒருவர் கேட்டார். அதற்குக் கவிமணி தெரிவித்த மறுமொழி சுவையாக இருந்தது. கேள்வி கேட்டவர் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே, கவிமணி அமைதியாகச் சொன்னர்:— "ஒருவகையில் நீங்கள் கருதுவது சரி, ஆனல் நானும் இறந்து போவேன், பாடப்பட்டவரும் இறந்து போவார், எத்தனையோ நூற்றுண்டாகும். பிறகு பாடினேர், பாடப்பட்டோரின் நினைப்பே ஒழிந்துபோகக்கூடும். பாட்டு நிற்கும். ஒரு தமிழ்ப் பாட்டு ஏன் கெட்ட விஷயத்தைத் தாங்கி நிற்கவேண்டும்? நல்ல விஷயத்தைத் தாங்கி, தமிழ்ப் பாட்டுக்கள் நிலைக்கட்டுமே." இந்நிகழ்ச்சி கவிமணியின் தூய உள்ளத்திற்குச் சான்று.

# இலக்கியச் செல்வங்கள்

## அவமானம் யாருக்கு?

"தமிழ்த்தும்பி"

வறுமையின் காரணமாகத்தான் உலகப் பேரிலக்கியங்களில் பல உருவாகியிருக்கின்றன. அதனால்தானோ என்னவோ, தரித்திரம் அறிஞர் பெருமக்களின் நீங்காத் தோழனாக இருக்கின்றது. நிழல் போல அவர்களைத் தொடர்ந்து பகைவன் துரத்துவதுபோல விரட்டியடிக்கிறது. அறிஞர் பலர் வறுமையில் உழலும் காரணத்தாலேயே, வறியவர்கள் எல்லோரும் அறிஞர்களாகிவிட முடியாதல்லவா? கவிஞன், புலவன், ஆசிரியன், அறிவாளி ஆகியோரை வறுமை வருத்தாது விட்டதில்லை.

அறிவுக்கும், புலமைக்கும் அமோகப் பெயரும், புகழும் இருந்த புறநானூற்றுக் காலத்திலும் வறுமைக்கன்னி தமிழ்ப் புலவன் என்னும் மணாளனை அடைந்தே தீருவது என்று தீர்மானித்து, தொல்லை பல தந்து வந்தாள். பெருஞ்சித்திரனார் என்ற கவிஞர் வறுமையின் கொலைக்கரத்தில் சிக்கித் தத்தளித்தார். அவரது மனைவி, மக்கள் பசியால் வாடி வதங்கினர். வேறு வகையின்றி பரிசில் பெற்று வருவதற்காகக் கவிஞர் புறப்பட்டார்.

வெளிமான் என்ற சிற்றரசன் பெருங்கொடையாளி என்று அறிந்து அவன் நாட்டைச் சேர்ந்தார் பெருஞ் சித்திரனார். கல்விமான்களிடம் அதிகப் பற்றும் அளவிலாப் பாசமும், மட்டற்ற மரியாதையும் மிக்க வெளிமானைக் கண்டால் தன் துயருக்கு ஒரு நிரந்தர முடிவு கிட்டும் என்று கவிஞர் எண்ணமிடலானார். தமிழ்க்காதல் கொண்ட கவிஞர் தமிழ்க்காதல் மிக்க சிற்றரசனை நோக்கி விரைந்தார்.

பெருஞ்சித்திரனார் தான் வாய்ப்பிழந்தவர் என்பதை வெளிமான் நாட்டுக்குச் சென்றதும் அறிந்தார். அந்தோ! அவரது தீவினை தொடர்ந்தது. வெளிமான் மாய்ந்து அவனது தம்பி இள

வெளிமான் முடிசூட்டி ஆட்சி செலுத்துகிறான் என்று கேள்விப்பட்ட பெருஞ்சித்திரனார் தன் நெஞ்சே வெடித்துத் தூள் தூளாகி விட்டது போல அதிர்ந்துபோனார்.

துயரச் சாயலுடன் இளவெளிமானை நோக்கிச் சென்றார் கவிஞர். துக்கம் தாளாத் தொண்டையோடு அவர் வெளிமானின் பேரிழப்பைப் பாடினார். ஆர, அமர கவிஞர் சொல்வதைக் கேட்க இளவெளிமானுக்குப் பொறுமையில்லை. உரிய மரியாதையோடும் அவன் கவிஞனை நடத்தவில்லை. அண்ணனின் இழப்பைப் பேரிழப்பாகக் கொள்ளவுமில்லை; அதற்காக அவன் அதிக வருத்தப்படவுமில்லை. அன்பு சிறிதும் இல்லாத அவனிடம் பெருஞ்சித்திரனார் தம் இல்லாமைக் குறையைப் பாடினார்.

"அண்ணன் செய்த அசட்டுத்தனம்! கண்டவர்களுக்குக் கஜானாச் செல்வத்தை வாரியிறைக்க வேண்டியிருக்கிறது!" இவ்வாறு அவன் அண்ணனின் அருங்குணத்தை மனதில் பழித்துக்கொண்டான்.

"அண்ணனின் பண்புகளை மறந்துவிடாதே. என் துயர் களைய ஏதாவது பரிசில் கொடு" என்றார் கவிஞர்.

துடிக்கும் உதடுகளோடு இளவெளிமான் "ஏதாவது கொஞ்சம் பொற்காசுகளை இவருக்குக் கொடுத்தனுப்புங்கள். அடுத்து இது போல என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தாதீர்கள்" என்றான்.

சுற்றி நின்ற பணியாட்கள் பொற்காசுகள் சிலவற்றைக் கவிஞருக்கு வழங்கினர். தன்னை அவமதிப்போடு அரசன் நடத்துகிறான் என்று கவிஞர் ஊகித்தார். "பிச்சைக் காசு போல தரச் சொல்லுகிறீர்களே! பாடிப் பிழைக்கும் பாவலனாக இருந்தாலும் நான் கற்ற தமிழ்ச் செல்வத்துக்குப் பிரதியாக அல்லவா உன்னைப் பரிசில் கேட்கிறேன். எனக்காகத் தரவேண்டாம். என் தமிழ்ப் புலமைக்காகக் கொடு." என்று வேண்டினார் கவிஞர்.

இளவெளிமான் எள்ளி நகைத்தான். அவனது சிரிப்பு கவிஞருக்கு ஆவேசமூட்டியது. உலோப குணம் படைத்த இளவெளிமான் இளஞ்சிரிப்பினிடையே மொழியலானான்: "சும்மா கொடுப்பதற்கு இவ்வளவு தந்ததே அதிகமல்லவா?"

பெருஞ்சித்திரனார் அவமானத்தால் தலை குனிந்தார். மறுமொழி பேசினால் தான் மேலும் அவமானப்பட நேரும் என்றெண்ணி வில்லினின்று விடுபட்ட அம்பு போல வேகமாக அவ்விடத்தை விட்டுப் போனார். அவரது செவிகளில் இளவெளிமானின் சிரிப்பு நஞ்சு போல விழுந்தது. குனிந்த தலை நிமிராமல் அவர் வேகமாகச் சென்றார், அவமானத்தின் சாட்டையடி தாளாது.

சில மாதங்கள் பறந்தன. திடீரென்று ஒருநாள் இளவெளிமானின் நாடு கலகலத்துவிட்டது. மக்கள் ஒருவரையொருவர் பல கேள்விகள் கேட்கலாயினர். எங்கே போர் தொடங்கி விடுமோ என்று அவர்கள் அஞ்சினர். யார்மீது மன்னன் முறைக் கேடாக நடந்துகொண்டானே என்று குடிகள் பயந்து விட்டனர். இதற்கெல்லாம் காரணம் அன்று அந்த ஊர் கடிமரத்தில் (காவல் மரத்தில்) கட்டப்பட்ட யானையே ஆகும்.

அக்காலத்தில் காவல்மரம் என்று ஒன்று ஒவ்வொரு முக்கிய ஊரிலும் இருந்தது. யாராவது ஒருவர் அந்நாட்டாரோடு போர் செய்வதாயிருந்தால் அம்மரத்தில் தம் நாட்டு யானையைக் கட்டி மன்னனைக் கோப மூட்டுவது வழக்கம். அக் கடிமரத்தைச் சுற்றி காவல்காரர் இருப்பர். அவர்கள் கட்டின நாட்டுக்காரனைப் பற்றி தம் மன்னனிடம் கூறுவர். பசுக் கூட்டத்தைக் கவர்ந்து சென்று சண்டைக்கு இழுப்பது போல, கடிமரம் வருந்த யானையைக் கட்டும் வழக்கம் ஏற்பட்டது போலும்!

இந்த யானையை வேற்று நாட்டரசன் கட்டாததால் காவல்காரர்கள் அவ்வளவு விரைவாக மன்னன் இளவெளிமானுக்குச் செய்தி அனுப்பவில்லை. வதந்தி கேட்டு கடுங்கோபத்தோடு மன்னன் கடிமரத்தை நோக்கி நடந்தான். காவல்காரர்கள் நடுநடுங்கினர். அங்கு பெருங்கூட்டம் கூடியிருந்தது. "யார் இப் போர் யானையை எனது கடிமரத்தில் கட்டியது?" என்று இடிபோல முழங்கினான் சிற்றரசன்.

காவல்காரர் வாய் திறந்து பதில் கூறுமுன் பெருஞ்சித்திரனார் கம்பீரமாகக் கூட்டத்திலிருந்து வெளிப்பட்டார்.

"மன்ன! உமது வாசகத்தைத் திருத்திக்கொள்ளுங்கள். இது போர் யானையல்ல. பரிசில் யானை! போர் யானையாக இருந்தால் கட்டினவன் நாட்டுக்கொடி யானையின் அம்பாரியில் பறக்குமல்லவா? கொடி நாட்டாது போர் யானையைக் கட்டும் மன்னன் கோழையல்லவா?

குமணன் என் தமிழ்ப் புலமைக்காக அன்புடன் வழங்கிய பரிசில் இந்த யானை. கேட்பவர்களுக்குக் கொடுத்து ஆதரித்து மகிழ்விப்பவன் நீ அல்ல; மற்றவர் கொடுத்த பொருளையாவது உன் நாட்டுக்குள் கொண்டு செல்லத் தடை ஏதும் இல்லையே? கேட்பவர்களுக்கு வாரி வழங்குபவர்கள் இம் மாநிலத்தில் இல்லாமற் போய்விடவும் இல்லை. கேட்பவர்களைக் கொடுப்பவர்கள் பெருந்தன்மையாக நடத்துவதையும், அதனால் கொடை வள்ளல்களின் சிறப்புப் பெருகுவதையும் நீ கண்ணாரக் காண்பாயாக.

ஈந்து பாதுகாக்கும் பண்பு இன்னும் உலகில் மாய்ந்துவிடவில்லை. ஈயும்படி உள்ளவர்களை இரவலர்கள் வேண்டினால், அதனால் இரவலர்கள் பெருந்தன்மை யிழந்தவர்கள் ஆகிவிடவும் மாட்டார்கள். இரவலர், புரவலர் இருவரின் சிறப்பியல்புகளையும் உய்த்துணர்வாயாக.

இங்கு கட்டப்பட்டுள்ள யானை நமக்குப் பரிசிலாகக் கிடைத்த பெருயானையாகும், கடிமரத்தில் பரிசில் யானை கட்டுவதில் தவறொன்றுமில்லை. விரைந்து செல்லும் குதிரைப் படையை யுடையவனே! நான் சென்று வருகிறேன்.''

பெருஞ்சித்திரனாரை அடையாளம் கண்டு கொண்டதும் மக்கள் அவரை ஆரவாரத்தோடும், உற்சாகத்தோடும் வரவேற்றனர். அவர் தம் அன்புக்குக் கவிஞர் பெருவணக்கம் செலுத்தி விடை பெற்றார். இளவெளிமான் ஒன்றும் செய்யவியலாது திகைத்தான். புலவரைத் தண்டிப்பது குற்றம்; அதுவும் மக்கள் விரும்பும் பெருஞ்சித்திரனாரைத்தான் தண்டிக்க இயலாதது குறித்து அவன் வருந்தினான். போருக்குத் தூண்டியிருந்தாலாவது தண்டித்திருக்கலாம். தான் அவமானப்பட இருந்ததை யெண்ணி அவன் உருகினான்.

பெருஞ்சித்திரனார் இளவெளிமானின் உலோப குணத்தையும், கவிஞர்பால் அவன் காட்டும் அவமரியாதையையும் இப்பாட்டில் இகழ்கிறார். அதே சமயம் புலவர் பெருமையையும், கொடையாளிகளின் சிறப்பையும் அவர் புலப்படுத்துகிறார். 'யாம்' என்று அவர் தம்மைக் கூறிக்கொள்வதில்தான் என்ன பெருமிதம்! கோபமும், இகழ்ச்சியும், தன் பெருமையும் மோதிடும் இப் பாடலைப் பாருங்கள்:

இரவலர் புரவலை நீயுமல்லை
புரவலர் இரவலர்க் கில்லையுமல்லர்
இரவலர் உண்மையுங் காணினி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங் காணினி: நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தி யாம் பிணித்த
நெடுநல் யானை யெம் பரிசில்
கடுமான் தோன்றல்! செல்வல் யாமே.

— புறநானூறு

[இரவலர்—கேட்பவர்; புரவலர்—ஆதரிப்பவர்; உண்மை—பெருந்தன்மை கடிமரம்—காவல் மரம்; கடுமான் தோன்றல்—விரைந்து செல்லக் கூடிய குதிரையுடைய தலைவனே!]

# அல் அமீன்?

— உலகப்பன —

கி. பி. 570 ஆண்டு.

குவா... குவா.... கு....வா!

அன்னை அமீனு உள்ளம் பூரித்தது. குழந்தை ஆண் என்று அறிந்ததும், தொடர்ந்து துயரம் அவளை வாட்டியது.

குழந்தையைக் கொஞ்ச, தன் கணவன் பக்கத்திலில்லையே என்று ஏங்கினாள். இறந்துவிட்ட காரணத்தால்.

எனினும் குழந்தையின் கொஞ்சு மொழியிலே — தவளும் காட்சியிலே—நடமாடும் எண்ணத்திலே—இன்பத்தைக் கண்டாள். குழந்தையின் வளர்ச்சியிலே கொழுநனைக் கண்டாள் அமீனு.

பிறக்கும்போதே தகப்பனை விழுங்கிவிட்டது என்றார் பலர்.

''தகப்பன் இறந்ததற்குத் தனயன் பொறுப்பா?'' என்று சொல்லாமலுமில்லை சிலர்.

ஆறு ஆண்டுகள் கடந்தன.

அன்னையும் மாண்டாள்!

அனாதையானான் சிறுவன்.

அப்துல் முத்தலீபு—தாத்தா—எடுத்து வளர்த்தார் அன்போடு, ஆசையோடு.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவரும் இயற்கையெய்தினார்.

பட்ட காலிலே பட்டது.

சிறுவன் சித்தப்பாவின் வீடு சேர்ந்தான்.

பிறந்ததிலிருந்தே அன்பிருந்தும் ஆதரிப்பார் இறந்துவிட்ட காரணத்தால், ஏங்கிக்கிடந்த பையனை அருகே வைத்துக்கொண்டார்.

உண்ணும்போதும்— உறங்கும் போதும்—ஊர்விட்டு ஊர் வணிகத் தொடர்பால் போகும்போதும் —கூடவே வைத்துக்கொண்டார்.

பையன் அடக்க ஒடுக்கமாய், அக்கம் பக்கத்தார் போற்றும் வண்ணம் வளர்ந்து வந்தான்.

செய்யும் வேலைகளைச் சிரத்தையோடு செய்தான்.

அதன் காரணமாக அல் அமீன் —நம்பிக்கையானவன்— என்ற பெயரும் பெற்றான்.

* * *

சித்தப்பாவின் குடும்பம் ஏழ்மையானது. எளிய வாழ்க்கை கொண்டது. பெருகும் குடும்பத்திற்கு வருவாய் கிட்டவில்லை. வளர்ந்துவிட்ட அல் அமீனும், உழைத்துவரும் ஊதியமும் இருந்தால்தான் குடும்பம் நடைபெறும்.

கதீஜா—பணக்காரி. சிரியா வரை வாணிகம் நடத்திவந்தாள். அல் அமீன் வகுப்பையே சேர்ந்தவள். சித்தப்பா சிபாரிசு பிடித்தார். அல் அமீன் கணக்கப்பிள்ளையானார்.

வாலிபப் பருவம். கட்டமைந்த உடல். வேலையிலே திறமை, செய்கையிலே உறுதி. பணப் புழக்கத்திலே ஒழுக்கம்.

எஜமானியின் வணிகம் மேலும் மேலும் பெருகியது.

கதீஜாவின் உள்ளம் கணக்கப்பிள்ளையை நாடியது.

கணக்கப்பிள்ளை முதலில் மருண்டார்.

கதீஜாவோ எஜமானி. செல்வமும் செருக்குமாக வாழ்பவள், வயது நாற்பது. விதவை. அவள் தன்னை விரும்புவது உண்மையாயிருக்கமுடியுமா—கணக்கப்பிள்ளை எண்ணினார்.

கணக்கப்பிள்ளை ஒழுக்கமான ஆள். நல்ல குணம் வயது இருபத்தைந்துதான். அழகனுங்கூட. தன்னை விரும்பினால்—எஜமானி நினைத்தாள்.

உள்ளங்கள் ஒட்டிய பிறகு...!

கேள்வி ஏன்?

கதீஜாவும் அல்அமீனும் தம்பதிகள்!

* * *

கி. பி. 605.

காபா மெக்காவின் புனித இல்லம் புதுப்பிக்கப்பட்டது. அதில் புனிதமாகக் கருதப்படும் கருங்கல்லை யார் கையால் பொருத்துவது என்ற சச்சரவு எழுந்தது. சமூகத்தில் சிறப்புப் பெற்றிருந்தவர்கள் நான்கு வகுப்பினர். ஒவ்வொருவரும் தானே அப்புனித காரியத்தைச் செய்ய வேண்டுமெனத் துடித்தனர்.

அல்அமீனிடம் வந்தனர்.

சச்சரவைக் கூறி சங்கடம் தீர்க்க வேண்டினர். அவருக்கே பெருத்த தலைவலியா யிருந்தது.

ஒரு எண்ணம் உதித்தது திடீரென.

தன் மேலாடையை எடுத்துக் கீழே வீசினார். அதன் மத்தியில் கருங்கல்லை வைக்கச் சொன்னார். சச்சரவிடும் நால்வரையும் நான்கு மூலைகளையும் பிடிக்கச் சொன்னார். அல்அமீன் கைச்சாடை காட்டி விளக்க கருங்கல் பொருத்தப்பட வேண்டிய இடத்தில் சேர்க்கப் பட்டது.

அனைவரும் மகிழ்ச்சியுற்றனர் தன்னுரிமை தனக்குக் கிடைத்ததையெண்ணி.

அல்அமீன் விரும்பாது இருந்த போதிலும் பெருமை அவருக்குக் கிடைத்தது என்று மக்கள் வியந்தனர்.

அதிலிருந்து அல்அமீனின் அறிவுத்திறன் — சிறப்பு— அப்பகுதி மக்களிடையே இடம் பெற்றது.

* * *

செல்வக் குடும்பம். வாழ்வுக்கு திண்டாட வேண்டியதில்லாத நிலை. அன்பு மனைவி. அவருக்கு நிரம்ப ஓய்வு கிடைத்தது.

தன் வாழ்வை எண்ணிப் பார்த்தார். தன்னைச் சுற்றியிருப்பார் சூழ்நிலையும் சிந்தித்தார்.

ஆண்டவன் ஒருவன். ஆனால் அவனை எண்ணச் செய்திருக்கும் முயற்சிகள். உருவ வழிபாடுகள். அதனால் நடக்கும் நாசச் செயல்கள்—போலிப் பூசல்கள்—அவர் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தன.

அடிக்கடி அண்மையிலுள்ள மலைக்குகைக்குச் சென்று சிந்தனையிலே ஆழ்ந்துவிடுவார்.

ஆண்டவன் ஒருவன்!

உண்மையானவன்!

கருணையானவன்!

முதலும் முடிவும் அவனே! என்ற முடிவுக்கு வந்தார். அதையே பரப்பினால்......!

எண்ணியதைச் சொன்னார்,

எதிர்ப்பு மிகுந்தது. வரலாற்றில் மிகமிகச் சாதாரணமான செயல். உருவ வழிப்பாட்டை உதாசீனப் படுத்துங்கள் என்றால் உறுமுவர் மக்கள், ஏசுவர், கல்வீசுவர். அவர் மட்டும் விதிவிலக்காக முடியுமா?

அவர் கலங்கவில்லை.

துணைவி முதல் சீடரானார்.

அபுபக்கர் அடுத்தவர்.
மருமகன் அலி தொடர்ந்தார்.
சையதீ —அடிமை—சேர்ந்தார்.
படைவரிசை பெருகியது.

* * *

உருவ வழிபாட்டுக்காரர்கள் ஊர் முழுதும். சீர்திருத்தக்காரர்கள் சிலர் மட்டுமே.

ஏச்சும், பேச்சும், கல்வீச்சும் மிகுந்தது.

முஸ்லீம்கள் —அல்அமீனைப் பின்பற்றியவர்கள் —உயிருக்காக அபிசீனியாவிற்குத் தப்பி ஓடினுர்கள்.

ஓடிய இடத்திலும் அவர்கள் கொள்கை பெருகியது.

அல்அமீனையும் அவரைச் சார்ந்தவர்களையும் சமுகத் தொடர்பிலிருந்து விலக்கி வைத்தனர். தொல்லை தந்தனர். துயரத்திற்காளாக்கினர்.

எனினும் அல்அமீனின் படைவரிசை பெருகிக் கொண்டேயிருந்தது.

அல்அமீனைக் கொன்ருலொழிய தங்கள் உருவ வழிபாடு—தங்கள் அக்கிரமம்—ஆகா வழி—இனியும் நீடிக்காதெனக் கண்டனர். சீர்திருத்தக்காரர்கள் எதிர்பார்த்து வாழவேண்டிய நிலை அவருக்கும் வந்தது.

படை திரட்டிக்கொண்டு அவர் வீட்டை முற்றுகையிட வந்து கொண்டிருந்தனர். செய்தியை முன்கூட்டியறிந்துவிட்ட நண்பன் அபுபக்கருடன் அண்மையிலிருந்த மலைக் குகைக்குத் தப்பியோடினுர். அங்கும் தேடி வந்துவிட்டனர். அந்தக் குகைக்குள்ளேயே மூன்று நாட்கள் இருந்துவிட்டு மூன்ரும் நாள் மதினு போய்ச் சேர்ந்தார்.

அன்று கி. பி. 622 ஜூன் திங்கள் இருபதாம் நாள்.

> **விற்பனையாளர்களுக்கு :**
>
> கூடுதலாக இதழ்கள் வேண்டுவோர் அதற்குரிய முன் பணத்தொகையையும் தவருது முன் கூட்டியே அனுப்பி வைக்கவேண்டும்.
>
> —பொறுப்பாளர்.

அதுவே ஹிஜிரா என்ற பெயருடன் முகமதியர்களின் காலக் குறிப்புக்குத் தொடக்கமாகும்.

* * *

ஆத்திரக்காரருக்கு அறிவு மட்டு. அதிலும் மத வழி சென்றவர்களுக்கு—உருவ வழிபாட்டைக் கொண்டவர்களுக்கு —உள்ளமே கிடையாது.

அடிக்கடி அல்அமீனைத் தாக்க —முகமதியர்களைக் கொலைசெய்ய —முறியடிக்க முயன்றுகொண்டிருந்தனர்.

காய்ச்சக் காய்ச்ச ஒளிவீசும் தங்கம்போல—தொல்லையின் மத்தியில் —துயரத்தினூடே — அல் அமீனின் படை வரிசை பெருகியது. வளர்ந்தது.

பன்னிரண்டாண்டுகள் பறந்தன.

மண் வீசி விரட்டிய மக்கா நகர மக்கள் மாலைபோட்டு வரவேற்றனர்.

ஆண்டவன் ஒருவனே! அந்த வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே உயிர் துறந்தார்.

உலகில் இன்று அவர் கொள்கையைப் பின்பற்றுபவர்களின் தொகை.......?

அந்த அல்அமீன்—நம்பிக்கையானவர்—தான் முகமது நபி! *



# ஒளிந்துகொண்டாள்.

— பறைவான் —



பொட்டிட்டாள், புதுநகையாள், பூவைக்கட்டி,
பொன்போலும் புதுமேனித் தலையைச் சீவி,
வட்டத்து வானத்தில் மதியைப் போல,
வளர்கின்ற பேரிருளில் ஒளியைப் போல,
சட்டத்துச் சமுதாயச் சடங்கால் பெண்ணாள்
சன்னல் வழி முகம்காட்டி வீதி பார்த்தாள்;
எட்டியடி வைத்துவரும் என்னைப் பார்த்து
ஏனோதான் உட்சென்று ஒளிந்துகொண்டாள்?

இளமையென்னும் வீறெல்லாம் உடம்பில் ஏறி,
இன்பமென்னும் ஆசைதன்னை எதிரே நோக்கி
வளமையென்னும் முகம் காட்டி விழியை வீசி,
வரவேற்பாள் என்னை யவள் வழிபிறக்கும்,
வாழ்ந்திடலாம் தோள்கோர்த்து இருவர் ஒன்றாய்,
வாழ்வதனில் வெற்றியுண்டு என்றே எண்ணி,
வாயில் வழி நடந்துவரும் என்னைக் கண்டேன்
வளர்சிகையாள் உட்சென்று ஒளிந்து
கொண்டாள்?



அன்றவளைப் பார்த்தக்கால் சின்னப் பெண்ணாள்,
ஆடிடுவாள் ஓடிடுவாள் முகம் குழைப்பாள்;
இன்றவளோ ஆளாகி விட்டாள் என்போல்
இருந்தோளும் இனிமுகமும் உடையாள் என்று
நன்று பல கற்பனைகள் மனத்தில் ஆக்கி
நடந்து வரும் என் மனத்தை நலியச் செய்து
சென்று விட்டாள் உட்புறத்தே ஏனோ? இல்லை,
செய்து வந்த பழக்கமென்னும் காரணம்
கொல்லோ?





# எனக்கேன் வாட்டம்?



— இளம்பாரதி —

லைமுகட்டைத் தழுவிடவே பாய்ந்து செல்லும்
வண்ணமதி நிகர்க்குமொரு பொருளுரைத்தால்
அலையலையாய் மிதந்துவரும் பொதிகைச் சாரல்
அள்ளியெனைக் குளிர்விக்கும் ஆற்றல் போல
நிலைகொண்ட இன்பத்தை ஒன்று கூட்டி
நெஞ்சினிலே நலம்பெருக்கும் பொருளுரைத்தால்
விலைகாணா நின்முகத்தைத் தவிர்த்துப் பாரில்
வேறெவற்றை என்சிந்தை நாடி யோடும்?

சலசலக்குங் காட்டாற்றின் பாடற் றன்னை
சமநோக்குக் கொண்டுணர நேர்ந்த போதில்
பலகாலும் இசைபெருக்கி யுயர்ந்து வாழும்
பண்புற்ற நின்பாடல் ஒலிக்கும் நெஞ்சில்!
நிலையின்றித் தவிக்கின்ற என்ம னத்தை
நிலைநிறுத்தி யோருணர்வில் வாழச் செய்து,
சிலைநிகர்க்கும் மேனியளே, காதல் கூட்டத்
திருவாக நீயிருக்க எனக்கேன் வாட்டம்?

நீருக்குத் துடிதுடிக்குஞ் சிசுவைப் போல
நெஞ்சினிலே துன்பங்கள் ஆட்சி செய்யப்
பாருக்குள் ஓய்வின்றி மக்கட் கூட்டம்
படுகின்ற திண்டாட்டம் என்றனுக் கில்லை
யாருக்குங் கிடைக்காத உன்றன் காதல்
என்னெஞ்சில் உள்ளவரை எனக்கேன் வாட்டம்?
பாரிதிலே செந்தமிழிற் கவிதை செய்து
பண்பாட நீயிருக்க எனக்கேன் வாட்டம்?





# திரை விலகியது

எம். கே. சங்கரன்

மிராசுதார் கண்ணப்பருடைய மூத்த பெண்ணின் கல்யாணத்திற்குப் பிரபல பாடகி கான சுந்தரியின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கான சுந்தரி ரேடியோ, சினிமா முதலியவைகளில் பிரபலமடைந்தது மட்டுமின்றி பத்திரிகைகளாலும் பிரப்லஸ்தர்களாலும் பாராட்டப் பெற்றவள். அவள் கச்சேரி எங்கிருந்தாலும் சரி, எள் விழக் கூட இடமில்லாத அளவுக்குக் கூட்டம் நிறைந்துவிடும்.

வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் அனைவரும் சங்கீதம் கேட்கவோ அல்லது அந்தப் பிரபல பாடகியை நேரில் பார்க்க வேண்டுமென்ற ஆசையாலோ இசை நடக்கும் ஹாலுக்குப் போய் முன்னணியில் உட்கார்ந்து கொண்டனர்.

ஆனால் சமையற்காரன் பண்டாரம் மாத்திரம் தன் வேலையிலேயே ஈடுபட்டிருந்தான். அவனுக்கும் கானசுந்தரியைப் பார்க்கவேண்டுமென்ற ஆசைதான். ஆனால் முதலாளியின் உத்தரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

"என்னடா பண்டாரம், எல்லாப் பயல்களும் கச்சேரி கேட்கப் போய் விட்டான். நீ ஏண்டா போகலே?" என்று கேட்டவாறு முதலாளி வந்தார்.

"எனக்கென்னய்யா கச்சேரி" என்றான் பண்டாரம் விரக்தியுடன்.

"நீ ஒருவன் ஏன் பாக்கியிருக்கே? போடா! கொஞ்ச நேரம் இருந்துவிட்டுச் சீக்கிரமாக வந்துவிடு. கச்சேரி பண்ற வாளுக்கு விருந்து வைக்கணும். எல்லா ஏற்பாடுகளும் நீதான் செய்யணும்" என்றார் அவர்.

"சரி" என்று சொல்லிவிட்டு இசையரங்கிற்கு வந்தான் பண்டாரம். அளவற்ற கூட்டம் நெருக்கியடித்துக்கொண்டிருந்தது. கூட்டத்தை விலக்கிவிட்டு ஒரு ஓரத்தில் உட்கார்ந்தான்.

இசை மேடையில் பக்க மேளக்காரர்கள் சுருதி சேர்த்துக்கொண்டிருந்தனர். கான சுந்தரியின் இடம் மாத்திரம் காலியாக இருந்தது. கூட்டத்தில் ஒவ்வொருவரும் கான சுந்தரியின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

சற்று நேரங் கழித்துக் கான சுந்தரி வந்தாள். கூட்டத்தில் ஒரு பரபரப்பு! பலமான கைதட்டல்கள்! பண்டாரத்தின் உள்ளத்தில் மின்சாரம் போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. அவன்

உள்ளத்தின் அடித் தளத்திலிருந்து ஒரு கேள்விக்குறி எழுந்தது. கானசுந்தரி கூட்டத்தாரை வணங்கிவிட்டு அமர்ந்தாள். 'விநாயகா!' என்ற கீர்த்தனையிலிருந்து இன்னிசை ஆரம்பமாகியது.

பண்டாரம் ஒரு அனாதை தாய் தந்தை, சகோதரர்கள் தெரியாது வளர்ந்தவன். சிறு வயதிலிருந்தே அவன் பிச்சை எடுத்துத்தான் வயிறு வளர்த்துக் கொண்டிருந்தான். அவன் கள்ளங் கபடமற்ற சிறுவன். பெற்றோர்களற்றவன் என்பதற்காக அவனுக்கிரங்கி அன்னமிட்டு வந்தனர் அவ்வூரார். அவர்கள் அவனைக் கூப்பிடும் பெயர்தான் பண்டாரம்.



அவனுக்கு வயது ஏற ஏற வாடிக்கையாக அன்னமிட்டவர்களே "என்னடா முழமாடுபோல் வளர்ந்து விட்டாயே! இன்னுமா பிச்சை எடுக்கிறாய்?" என்று பேச ஆரம்பித்து விட்டனர். முதலில் இது அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் இதைப் போல் பலர் கேட்க ஆரம்பித்து விட்டனர். அவன் பிச்சைக்காரன்தான் என்றாலும் அவனுக்கும் ரோஷமும், மானமும் சிறு வயதிலிருந்தே இருக்கத்தான் செய்தது. ஒரு வீட்டில் அவன் பிச்சை யெடுக்கச் சென்ற பொழுது அவ்வீட்டுக்காரன் "ஏண்டா! இவ்வளவு பெரிய உடலை எதுக்கடா வச்சிக்கிட்டிருக்கே? உழைத்து வேலை செய்தா என்னடா!" என்று கத்தினான். இவ்வார்த்தைகள் அவன் உள்ளத்தின் ஆழத்தில் போய் குத்தியது. உடனே

அதை விட்டுக் கிளம்பிவிட்டான். அந்த வார்த்தைகள் அவன் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டேயிருந்தது. தெருவில் ஒருவர் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். "எவன் தன் கையினுல் உழைத்து ஜீவிக்கிருனே அவன்தான் மனிதன்! பணமிருக்கிறது என்பதாலோ, அன்னமிட எத்தனையோ பேர்களிருக்கிருர்களென்று சோம்பேறித் தனத்தால் பிச்சை எடுத்துத் திரிந்தாலோ அவர்கள் மனிதனுகப் பிறந்தும் பிரயோஜனமற்றவர்கள்தான்!" இவ்வார்த்தைகளும் அவன் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது.

"உழைத்தால் கௌரவமாக நின்று கூலி வாங்கலாம் பிச்சையெடுப்பதால் அவர்கள் பேசும் ஏச்சையும் கேட்கத்தானே வேண்டியிருக்கிறது?" அவனுக்கு ஞானம் பிறந்தது. 'இனி உயிர் போவதாயிருந்தாலும் பிச்சையே எடுக்கக்கூடாது' என்று அவன் உள்ளத்தில் ஒரு லட்சியம் உதயமாகியது.

வேலை தேடித் தெருத் தெருவாய் அலைந்தான். அவன் முயற்சி வீண்போகவில்லை. ஒரு பெரிய கட்டிட வேலை நடந்துகொண்டிருந்த இடத்தில் அவனுக்கு வேலை கிடைத்தது. பன்னிரெண்டணுதான் ஒருநாள்கூலி. வேலை செய்வது சுலபம் என்று முதலில் அவன் மனம் எண்ணியிருந்தது. சற்று நேரம் வேலை செய்வதற்குள் அவன் முதுகு கடுத்து விட்டது. வேலை முடிந்ததும், அவனுக்குக் கூலி கிடைத்தது! அவன் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தது. அவன் வாழ்விலேயே உழைப்பினுல் கிடைத்த முதல் கூலியல்லவா அது? அன்று ஹோட்டலில் தான் சாப்பிட்டான். ஆகா! என்ன ருசி! தன் கையாலேயே உழைத்து உண்ணும் ஆகாரத்தின் அளவற்ற ருசியை அன்றுதான் முதலில் உணர்ந்தான். இப்பொழுது அவனுக்குச் சோற்றுக் கவலை கிடையாது. அன்னமிடுபவர்களின் ஏச்சுகள் கிடையாது. அவன் எது விரும்பினுனே, வாய்திறந்து மூடுவதற்குள் அவன் முன் வந்தது.

திடீரென்று அந்த மாளிகை வேலை பூர்த்தியாகி விட்டது. மீண்டும் வேலைக்காக அலைய வேண்டிய நிலை வந்துவிட்டது அவனுக்கு. ஆனுல் அவன் எதிர்பார்த்ததுபோல அவ்வளவு எளிதாக வேலை கிடைத்துவிடவில்லை. மறுபடியும் பட்டினி அவனை ஆட்கொள்ளத் தொடங்கியது. கையிலுள்ள காசுகள் அனைத்தும் காலியாகிவிட்டது. பசிக்கொடுமை தாளமாட்டாது மீண்டும் பிச்சை எடுக்கலாமா என்று கூட எண்ணினுன். "சீ! கௌரவமாகக் கிடைக்கும் காசை விட்டுவிட்டு இந்த இழிதொழிலுக்கு ஏன் போகவேண்டும்? அவன் உள்ளம் மறுத்துவிட்டது. இடையிடையே சுமைகள் தூக்கி எப்படியோ தன் காலத்தைக் கழித்துக்கொண்டான்.

மூன்று தினங்களாக அவனுக்கு வேலையே கிடைக்கவில்லை. பசியால் வயிறு ஒட்டிவிட்டது. சோர்வோடு ரயில்வே ஸ்டேஷன் பக்கம் வந்தான். அப்போதுதான் ரெயில் வந்திருந்தது. ஏதாவது சுமை கிடைக்கும் என்று எண்ணியவாறு பிர

யாணிகள் வரும் வழியில் நின்று கொண்டான். எத்தனையோ வித மனிதர்கள் வந்தார்கள். ஏழைகள் தூக்க முடியாத சுமைகளைத் தாங்களே தூக்கிக் கொண்டு சென்றனர். அழகிய பெண்கள் ஒய்யாரமாக நடந்து சென்றனர். பணக்காரர்கள் பெட்டி முதலிய சாமான்களுடன் டாக்சிகளை நாடிக்கொண்டிருந்தனர். நடுத்தர மனிதர்களோ, குதிரை வண்டிகளைத் தேடினர். ஒரு சிலர் வேறு கூலிகளை அமர்த்திக்கொண்டனர். எல்லாவற்றையும் ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டே நின்றான் பண்டாரம். கடைசியாக நாகரீக உடையணிந்த ஒரு இளம் பெண்ணும் வாலிபனும் வந்தார்கள். "அம்மா, கூலியிருக்கா?" அவர்களை நோக்கிப் பரிதாபமாகக் கேட்டான் பண்டாரம்.

"மாதா கோவில் தெருவிற்கு இந்தப் பெட்டிக்கு என்ன கேட்கிறாய்?" என்றாள் அந்தப் பெண்.

"மாதா கோவில் தெரு ஒரு மைல் இருக்குமே! ஒரு ரூபாய் கொடுங்க"

"ஒரு ரூபாயா? எட்டணா தான் தருவேன் சம்மதமா?"

"பன்னிரெண்டணாவாவது கொடுங்கம்மா"

இந்தச் சமயத்தில் "அம்மா, கூலி இருக்கா?" என்று பின்னாலிருந்து ஒரு பெண் குரல் வந்தது. திரும்பிப் பார்த்தான் பண்டாரம். ஒரு இளம் பெண் கிழிந்த சேலையோடு வறுமையே உருவாக நின்றுகொண்டிருந்தாள்.

"மாதாகோவில் தெருவிற்கு இந்தப் பெட்டிக்கு என்ன வேணும்?" என்று அவளை நோக்கிக் கேட்டாள் அந்நாகரீக மங்கை.

"நீங்க கொடுத்ததை வாங்கிக்கறேன்" என்றாள் அவள். அவளுடைய குரலில் சோகம் தொனித்தது.

"சரி பெட்டியைத் தூக்கு"

பண்டாரத்திற்குவந்த கோபத்திற்கு அளவேயில்லை. தன் பிழைப்பை இந்தப் பெண்ணல்லவா வந்து கெடுத்துவிட்டாள் என்று மனம் புழுங்கினான்.

மூவரும் கண்ணுக்கு மறையும் வரை ஏமாற்றத்துடன் பார்த்துக் கொண்டே நின்றான் பண்டாரம். பசி அவன் அடிவயிற்றைக் கிள்ளியது. மயக்கத்தோடு கால் சென்ற வழி நடந்தான். எத்தனையோ தெருக்களைச் சுற்றிவிட்டு ஒரு ரோடு வழியாக வந்தான். பிளாட் பாரங்களில் அவனைப்போல் பல ஏழைகள் வசித்துக்கொண்டிருந்தனர். சுற்றுமுற்றும் பார்த்து விட்டுப் பெருமூச்செரிந்தான். தூரத்தில் ஒரு பெண் அதிவேகமாக வந்து கொண்டிருந்தாள். ஆம். 'அவள்' தான். அவன் அன்றைய வாழ்வைக் கெடுத்தவள்! அவனைக் கடந்து பிளாட்பாரத்தில் வசித்த ஒரு தாடிக் கிழவன் பக்கத்தில் சென்றாள். பண்டாரமும் அவர்களிருந்த இடத்துக்கு வந்தான். "அப்பா, இன்னிக்கு நல்ல கூலி கிடைச்சது! ரெயிலிலிருந்து ஒரு அம்மா வந்தாங்க. 'ஒரு பெட்டிக்கு என்ன கூலி'ன்னு கேட்டாங்க, தந்ததை வாங்கிக்கிடறேன்னேன். அந்த மகாராசி ஒரு ரூபாய் தந்தா" என்று அப்பெண் மகிழ்ச்சி பொங்கச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இதைக் கேட்டதும் பண்டாரத்தின் மண்டையில் ஏதோ 'விர்' ரென்று ஏறுவதுபோலிருந்தது.

"நான் பன்னிரண்டணு கேட்டேன், மறுத்துவிட்டாள். இந்தப் பெண்ணுக்கு மாத்திரம் ஒரு ரூபாய்!" பொத்தென்று மயங்கிக் கீழே விழுந்துவிட்டான் பண்டாரம்.

அவன் விழித்தபொழுது கிழவன் அவனைத் தன் மார்போடு சாய்த்து வைத்துக்கொண்டிருந்தான். அந்தப் பெண் ஒரு ஈயக் கிண்ணத்தில் தண்ணீர் வைத்து அவன் வாயில் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"நீ யாரு தம்பி?" என்று கேட்டான் கிழவன்.

"நான் ஒரு அனதை. மூன்று நாளாய் சாப்பிடலே" என்றுன் பண்டாரம்.

"பாவம்! இரு சோறு பொங்கியாவுது, சாப்பிடலாம்" என்றுன் கிழவன்.

சாப்பிட்டுமுடிந்ததும், மூவரும் பேசிக் கொண்டிருந்தனர். தன் நிலைமை முழுவதையும் கிழவனிடம் கூறினன் பண்டாரம். "நீ இங்கேயே இரு தம்பி. நாம் மூணுபேரும் ஒழைச்சு ஒண்ணைச் சாப்பிடலாம்" என்றுன் கிழவன். "சரி" என்று ஒப்புக் கொண்டான் பண்டாரம்.

மூவரும் ஆளுக்கொரு துறையில் இறங்கி வேலை செய்தனர். ஒருவர் உழைப்பு மற்றொருவரைத் தாங்கிக் கொண்டிருந்தது. இதனல் அவர்களிடமிருந்து பசி மறைந்துவிட்டது. சிறிது பணமும் சேர்ந்து வந்தது. திடீரென்று கிழவனுக்கு வியாதி வந்து படுக்கையில் விழுந்துவிட்டான். அவனைக் காப்பாற்றுவதற்கு இருவரும் தீவிர முயற்சி செய்தனர் என்றுலும் கிழவன் அபாயகரமான நிலைமையில்தானிருந்தான். தன்னைப்பற்றிய நம்பிக்கை அவனுக்கே அற்றுவிட்டது. ஒருநாள் தன் மகளையும் பண்டாரத்தையும் அழைத்து "இனி நான் பிழைக்கமாட்டேன் வள்ளி, பண்டாரம் நல்ல பையன்! அவனேடு நீ சுகமாக வாழம்மா" என்று சொல்லிக் கொண்டே இருவரின் கரங்களையும் ஒன்றுக இணைத்து "பண்டாரம், வள்ளியை என் கண்போல் வளர்த்தேன். அவளை நீதான் காப்பாத்தணும் என்றுன்".

கிழவன் இறந்துவிட்டான். அழுதுகொண்டிருந்த வள்ளியை ஆறுதல்படுத்தினன் பண்டாரம். இனி என்ன செய்வது என்று இருவரும் ஆலோசித்தனர். நாலு பேருக்கு முன் கௌரவமான முறையில் கல்யாணம் முடித்துக் கொள்ள வேண்டும்; நடுத்தர மக்களோடு தாங்களும் ஒன்றிவிடவேண்டும் என்று திட்டமிட்டனர். நல்ல யோசனைதான். ஆனல் பிச்சைக்காரர்கள் என்று அவர்களை மதித்திருந்த அந்த ஊர் அத்தகைய நிலைமைக்கு இடங் கொடுக்குமா?

இருவரும் மற்றொரு நகரத்திற்குச் சென்றனர். சிறு வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டனர். எவ்வளவோ முயற்சிக்குப் பின் ஒரு கிளப்பில் சாப்பாடுபோகச் சம்பளத்திற்கு அமர்ந்து கொண்டான் பண்டாரம். வள்ளி நாலு பெரிய வீடுகளில் வேலைசெய்து தன் வயிற்றைக் கழுவிக்கொண்டாள். சம்பளம் மிஞ்சியது. நாளடைவில் பண்டாரத்தின் சம்பளம்

உயர்ந்துகொண்டிருந்தது. சமையலில் பண்டாரத்திற்கு நிகர் யாரும் கிடையாது என்ற புகழ் வாங்கிவிட்டான். இப்போது அவனுக்கு உயர்ந்த சம்பளம். தன் நிலைக்குத் தகுந்தவாறு பெரிய வீடாகப் பார்த்துக் கொண்டான். வள்ளிக்கு ஆடையாபரணங்கள் அணிவித்தான். அவள் அயல் வீடுகளில் அடிமை வேலை செய்வதை நிறுத்தி, அவளைக் குடித்தனக்காரியாக்கினான்.

அன்று ஹோட்டலிலிருந்து வீடு திரும்பிய பண்டாரம் ஒரு இன்னிசை கேட்டு ஆச்சரியத்தினால் நின்றுவிட்டான். சினிமா பாட்டு ஒன்றைத் தன் இனிய குரலால் இசைத்துக் கொண்டிருந்தாள் வள்ளி. "வள்ளி, இவ்வளவு அழகாகப் பாட எங்கே படித்தாய்?" என்றான் பண்டாரம்.

"கேள்வி ஞானம்தான்!" என்றாள் வள்ளி சிரித்துக் கொண்டே. ஆகா! அவள் இப்பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறாள்! அவளைப் பார்த்து இன்ப போதையில் திளைத்து விட்டான் பண்டாரம் அவள் அழகோடு சங்கீதமும் சேர்ந்து விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? "எங்கே இன்னொரு பாட்டுப் பாடு" என்றான். சில பாட்டுக்கள் பாடினாள் வள்ளி. பண்டாரம் மெய்மறந்து விட்டான். "வள்ளி நீ கண்டிப்பாய் சங்கீதம் படிக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்கிறேன்" என்றான்.

மறுநாளே பிரபல சங்கீத வாத்தியார் ஒருவரை ஏற்பாடு செய்துவிட்டான். மாதம் பத்து ரூபாய் சம்பளம். வாத்தியார் வீட்டில்போய் படித்துக்கொண்டு வரவேண்டும்.

வள்ளிக்குச் சங்கீதத்தில் மிகவும் அபிவிருத்தி அடைந்து கொண்டு வந்தது. சொல்லிக் கொடுப்பதை மிக எளிதில் மனதில் பதித்துக் கொள்ளக்கூடிய ஞானம் அவளுக்கிருந்ததால் வாத்தியார் மிக உற்சாகத்தோடும் கபடமின்றியும், சொல்லிக் கொடுத்தார்.

மறு வருஷம் வள்ளியின் சங்கீத அரங்கேற்றம் நடைபெற்றது வாத்தியாரின் முயற்சியால் பிரபல தனவந்தரின் மகன் பாஸ்கரன் தலைமை வகித்தான். அந்த முதல் கச்சேரியிலேயே, வள்ளிக்குப் பிரமாதமான புகழ் ஏற்பட்டு விட்டது. பாஸ்கரன் வாயாரப் புகழ்ந்தான். பத்திரிகைகள் பாராட்டுரை நல்கின. அன்றிலிருந்து அவளுக்கு வெளியிடங்களிலிருந்து கச்சேரி 'சான்ஸ்' கிடைத்தது. பாஸ்கரன் பெரிய சங்கீத சபாக்களிலும். தனவந்தர்கள், உத்தியோகஸ்தர்கள் வீட்டிலும் வள்ளியின் சங்கீதக் கச்சேரிக்கு சிபார்சு செய்தான். இதன் காரணமாக பாஸ்கரனுடன் நெருங்கிப் பழகினாள் வள்ளி.

இந்தச் சமயத்தில் பண்டாரம் ஒரு மனஸ்தாபத்தின் காரணமாக ஹோட்டலிலிருந்து விலகி விட்டான். மற்றொரு இடத்தில் வேலைக்கு முயற்சித்துக்கொண்டிருக்கும் போது வள்ளி தடுத்து விட்டாள். அப்பொழுது வள்ளிக்கு சங்கீதத் துறையில் நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது. நான்கு மாதங்கள் வரை சும்மாயிருந்துகொண்டிருந்தான்.

ஆனால் இவ்வளவு காலத்திற்குள் வள்ளியிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டு வருவதாகத் தெரிந்தது பண்டாரத்திற்கு.

பண்டாரத்திடம் வள்ளி அவ்வளவு அதிகமாகப்பேசுவதில்லை. பாஸ்கரன் தன் வீட்டிற்கு அடிக்கடி வருவதும், வள்ளி அவன் வீட்டிற்குப் போவதும், அவனுடன் சிரித்துப் பேசுவதும் பண்டாரத்தின் உள்ளத்தில் ஒருவித பொறுமையை மூட்டி வந்தன.

சங்கீதத்தைச் சாக்கிட்டு அவனிடம் ஒதுங்கியே நடந்துகொண்டாள் வள்ளி. "வள்ளி" என்று அவன் அன்புடன் அழைத்து வரும்நேரம் "ஒரு நல்ல கீர்த்தனையைப் படிக்கப் போகிறேன். தயவு செய்து தொந்தரவு செய்யாதீர்கள்" என்று சொல்லி அவனுடைய அன்பிற்கே முற்றுப் புள்ளி வைத்து விடுவாள்.

அவளுடைய போக்கு பண்டாரத்திற்குப் பிடிக்கவில்லை. பணக்காரன் சிநேகிதம் கிடைத்த பின தன்னை நிராகரிககிறாளோ என்றுகூட நினைததான்.

வள்ளியின் புகழ் பிரபலமாகிக் கொண்டிருந்தது. பிரபலஸ்தர்கள் அவள் வீடு தேடி வந்தனர். அவர்களிடம் வள்ளி சகஜமாக சிரித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது பண்டாரத்தின் அடிவயிற்றில் தீப்பற்றி எரியும். அவள் போட்டோ பத்திரிகைகளில்கூட பிரசுரமாகியது. "வள்ளி பிரபலமடைந்து விட்டாள். இனி அவளை அடைவது கடினம்தான்" இந்த எண்ணம் ஏற்படவே அவன் உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது.

அன்று இரவு பதினொறு மணியாகியும் வெளியில் சென்றிருந்த வள்ளி திரும்பி வரவில்லை. அவளைத் தேடி வாத்தியார் வீட்டிற்குச் சென்றான். "அவள் போய் ரொம்ப நேரமாச்சே" என்று சொல்லிவிட்டார் வாத்தியார். பாஸ்கரன் வீட்டிற்குச் சென்றிருக்கலாம் என்று நினைத்து அங்கு சென்றான். அவன் வாசலில் வந்து கொண்டிருக்கும் பொழுது, பாஸ்கரன் வள்ளியைப் பற்றி யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தான். சட்டென்று பண்டாரம் ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று அவர்கள் பேசுவதைக் கூர்மையாகக் கவனித்தான்.

"என்னப்பா, வள்ளியையா கல்யாணம் செய்து கொள்ளப் போறே? இதென்னப்பா!" என்றான் பாஸ்கரனுடன் இருந்தவன்.

"வள்ளிக்கிருக்கிற அழகுக்கும் சங்கீதத்திற்கும் பெரிய பணக்காரர்கள் கல்யாணம் செய்து கொள்ளக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும், அவள் என்னையே தான் காதலிக்கிறாள்," என்றான் பாஸ்கரன் பெருமையுடன்.

"நான் அதுக்குச் சொல்லவில்லை. வள்ளிக்கு ஏற்கனவே புருஷன் இருக்கானே! நீ கட்டிணு நல்லாயிருக்கான்னு தான் யோசிக்கிறேன்".

பாஸ்கரன் அலட்சியமாகச் சிரித்தான். "அவள் வீட்டில் ஒரு சோதா கிடக்கானே அவனைத்தானே சொல்றே? அவன் அவளுடைய கணவன் இல்லை. இடையில் எங்கிருந்தோ வந்தவன் கொஞ்ச காலமாக ரெண்டு பேரும் ஒண்ணுயிருந்து உழைத்



துச் சாப்பிட்டார்களாம். அதை வைத்து அவளைக் கல்யாணம் செய்துக்கலாம்னு அந்தப் பயல் மனக்கோட்டை கட்டுகிறான். அவன் தன் வீட்டிலிருக்கிறதே வள்ளிக்குப் பிடிக்கலை. அவனை வெளியேற்றணும் என்கிற யோசனையைக் கூட என்னிடம் கேட்டாள்......'' அதற்குமேல் பண்டாரத்தால் அதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. "வஞ்சகி! பணம் வந்தவுடன் திமிரும்கூட வந்து விட்டதே! என்னைப் பற்றி அன்னியனிடம் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறாள்'' அவன் உள்ளம் பொருமியது. வேகமாக வீட்டிற்கு வந்தான்.

வள்ளி வாசலில் நின்றுகொண்டிருந்தாள். "இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீர்கள்? உங்களுக்காக நான் காத்திருக்கணுமா? சீக்கிரம் சாப்பிடுங்கள்

நான் சாதகம் பண்ண வேண்டிய திருக்கிறது'' என்ருள்.

அவள் அலட்சியத்துடன் கூறுவது போலிருந்தது பண்டாரத்திற்கு. ''எனக்குப் பசியில்லை'' என்று சொல்லிவிட்டான். வள்ளி பேசாமல் போய் பாட ஆரம்பித்து விட்டாள்.

பண்டாரத்தின் உள்ளம் குமுறியது. இரவு முழுவதும் தூக்கம் பிடிக்கவில்லை. அருகிலுள்ள கட்டிலில் மிக நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள் வள்ளி. அவளைப் பார்க்கையில் பண்டாரத்தின் வயிறு எரிந்தது. வஞ்சகத்தின் பிரதிபிம்பமாகத் தோன்றினுள் வள்ளி. ''அவளை எழுப்பி முடிவைக் கேட்டு விடலாமா? சீ! அவளிடம் ஏன் கேட்க வேண்டும்? அவள் யாரோ? நாம் இடையில் வந்தவன் தானே! அவளுக்கும் நமக்கும் என்ன உரிமை?'' சட்டென்றெழுந்தான். கதவைத் திறந்து விறுவிறுவென்று வெளியே போய் விட்டான்.

எங்கெல்லாமோ அலைந்து விட்டுக் கடைசியாக இந்த வீட்டில் பழைய சமையல் தொழிலையே ஆரம்பித்து விட்டான்.

அவன் சிந்தனை கலைந்தது. கச்சேரியில் ஆவர்த்தனம் நிகழ்ந்து கொண்டிருந்தது. கான சுந்தரி தாளம் போட்டுக்கொண்டிருந்தாள். அவள் காதுகளிலுள்ள வைரமிழைத்த டோலக்கும் நெக்லெஸ்ஸும் டால் வீசிக்கொண்டிருந்தன. அவள் அழகு சபை முழுவதும் பிரகாசித்தது. அவள் தான் வள்ளி! எங்கோ கிடைத்த பெயர் தான் கானசுந்தரி அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காமல் வந்து விட்டான் பண்டாரம்.

கச்சேரி முடிந்ததும் கானசுந்தரியின் கோஷ்டிகளுக்குப் பரிமாறும் பொறுப்பை பண்டாரத்திடமே ஒப்படைத்து விட்டார் முதலாளி. அவன் தயங்கினுலும், அவரிடம் பதில் பேசத் துணிவின்றி, அவமானத்தைச் சகித்துக்கொண்டு பரிமாறினுன். கானசுந்தரியின் அருகில் வந்ததும் அவன் கைகள் நடுங்கின. 'கூல் டிரிங்க் கிளாஸ்' அவன் கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது அவள் பட்டுப் புடவை மீது தெரித்துவிட்டது. சட்டென்று நிமிர்ந்த கான சுந்தரி, பண்டாரத்தைக் கண்டதும் ''அத்தான்'' என்று அலறி விட்டாள்.

பண்டாரம் பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்தான். பக்கத்திலிருந்தவர்கள் ஆச்சரியத்துடன் ''அத்தானு! உங்களை விட்டுப் போய் விட்டாரென்று தேடிக் கொண்டிருக்கிறீர்களே அவரா?'' என்று கேட்டனர்.

''ஆம்'' என்று அவர்களுக்குப் பதிலளித்துவிட்டு ''என்னத்தான் பேசாமல் நிற்கிறீர்கள்? நான் என்ன செய்தேன், என்னைவிட்டு ஓடி வந்து விட்டீர்கள்?'' என்று புலம்பினுள்.

''நீ மற்ருெருவரைக் காதலிக்கும்போது எனக்கு அங்கென்ன வேலை?''

''நான் மற்ருெவரைக் காதலித்தேனு?

''பாஸ்கரை நீ காதலிக்கவில்லை?''

''இல்லையே! வெறும் சிநேகம் தான். அந்தப் பாவி என் கற்பை

அழிக்க முற்பட்டான். இப்போது நான் அவனிடம் பேசுவதுகூடக் கிடையாதே!''

''அப்படியானால் என்னிடம் வெறுப்பாக நடந்து கொண்டாயே?''

''நான் வெறுப்பாக நடந்து கொண்டேனா? ஐயையோ! நீங்கள் வீண் அர்த்தம் செய்துவிட்டீர்கள். அப்பொழுது எனக்கு மேல் பாடம் நடந்துகொண்டிருந்தது. உங்களிடம் இன்பமாகப் பேச ஆரம்பித்து விட்டால் வீண் பொழுது போய் விடுமே என்று தான் ஒதுங்கிக்கொண்டேன்''

''வள்ளி அப்படியானால்என்னை நீ மறந்து விடவில்லையே?''

''என் அப்பா எனக்களித்த உங்களை என் உயிர் போனாலும் மறந்து விடுவேனா?'' என்று சொல்லிக்கொண்டே பண்டாரத்தின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். அவர்களின் அன்பிற்கிடையே நின்ற சந்தேகத் திரை விலகி விட்டது.

''பிரபல பாடகி கானசுந்தரிக்கும், திரு. பண்டாரத்திற்கும் வெகு சிறப்பாகத் திருமணம் பெற்றது'' என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்த பொது மக்கள் ''யார் இந்தப் பண்டாரம்?'' என்று கேட்டுக்கொண்டனர்.

நாடோடி வள்ளி, பாடகி கான சுந்தரி யாவதற்குக் காரணம் இந்தப் பண்டாரம்தான் என்பது கானசுந்தரிக்கல்லவா தெரியும்?

*


# பொன்னி

(மாதமிருமுறை)

ஆண்டுச் சந்தா:

| உள் நாடு: | வெளி நாடு: |
|---|---|
| ரூ. 6—0—0 | ரூ. 7—8—0 |

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது. சிலோனுக்கு மட்டும் வீ. பி. பி. மூலமாக அனுப்பப்படும். தனிப்பிரதிக்கு 0—5—0 தபால் தலை அனுப்பவேண்டும்.

உங்கள் சந்தா சம்பந்தமாக அலுவலகத்திற்கு எழுதும்போது உங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டியது அவசியம்.

விபரங்கட்கு:

**பொன்னி லிமிடெட்,**

127, பிராட்வே, சென்னை–1.

# சிறந்த புதிய வெளியீடுகள்!

★

| | | |
|---|---|---|
| நினைவுச்சின்னம் | இளமைப்பித்தன் | ... ரூ. 1- 0-0 |
| கடல் முத்து | எஸ். ஆறுமுகம் | ... ரூ. 1- 0-0 |
| உலக அரங்கில் | டி. கே. சீனிவாசன் | .... ரூ. 1- 0-0 |
| தபாலாபீஸ் விநோதங்கள் | க. சண்முகசுந்தரம் | .... ரூ. 0- 8-0 |
| கம்பன் கெடுத்த காவியம் | | ... ரூ. 0- 4-0 |
| இலக்கியச் சந்தையில் | மு. அண்ணாமலை | ... ரூ. 0- 8-0 |
| வீடும் விளக்கும் | 'சுகி' | ... ரூ. 0- 8-0 |
| தாஜ்மஹால் | நா. பாண்டுரங்கன் | .... ரூ. 0- 8-0 |
| கொடிமுல்லை | வாணிதாசன் | .... ரூ. 0-12-0 |
| இரு கதைகள் | நாரா நாச்சியப்பன் | .... ரூ. 0 -4-0 |

வணிகர்கட்குத் தக்க கழிவு உண்டு.

★

விவரங்கட்கு:

## பொன்னி லிமிடெட்

127, பிராட்வே, : : சென்னை – 1.




அவன் நடந்தான்—நடந்தான்—நடந்துகொண்டே இருந்தான். அவன் கிளம்பும்போது அவன் எதிரே நீண்டு கிடந்த நிழல் குறுகிக் குறுகி அவன் பின்னால் நீண்டுகொண்டிருந்தது. அவன் கால்கள் கடுத்தன. ஆனால் கால் கடுக்கிறதே என்று காலந் தாழ்ந்து சென்றால் காரியம் கெட்டு விடுமே! அந்தக் காரியம்? ...அது....? அதில்தான் இருக்கிறது அவன் வாழ்வு! அவன் கற்பனை, தெளிந்த நீரில் சிறு கல்லைப் போட்டால் நீர் வட்ட வட்டமாக சலனப் படுவதுபோல விரிந்து கொண்டிருந்தது. அவன் நினைவுப்படலம் நெடு மூச்சு விட்டுக்கொண்டே நீண்ட காலங்களுக்கு முன் தாவியது. சே! அதை அவனால் நினைக்கக் கூட முடியவில்லை. அந்தச்சமயத்தில் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன அந்தப் பழமொழிதான் அவன் நினைவில் தோன்றியது: "வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்தாற் போல" என்ற மகத்தான பழமொழிதான் அது! அந்தப் பழமொழி என்றென்றைக்கும் புதுமொழிதான் போலிருக்கிறது!

இப்பொழுது அவன் நகரத்தின் ஒரு முக்கியமான தெருவில் நடந்துகொண்டிருந்தான். அவன் சிந்தனை சிதறினாலும் அவன் கண்கள் கடமையை நினைத்து அலைபாய்ந்து கொண்டிருந்தன. ஆனால் கடமையின் கருத்துருவம் மட்டும் கண்களுக்கு புலப்படவில்லை.

நடுரோட்டில் நடந்தான்; ஆனால் நடு வீதியிலே நின்றிருக்கும் வீதியின் விபத்துக் காப்பாளன் மட்டும் அவன் மேல் வசை மாரி பொழியத் தவறவில்லை. அவனுக்கு அதில் ஒரு சிறு இன்பம். ஒரு சிலர் 'அவன் தன்னை விட மட்டம்' என்று சொல்லிக் கொள்வதில் விநாடி மகிழ்வு காண்கிறார்கள்!

அவன் ஒதுங்கி நடந்தான். சிங்கம் சீறும்போது சிறு நரி 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று ஓடித்தானே ஆகவேண்டும்?

ஏழை; எளியவன்; தாழ்ந்தவன்; தரித்திரன் இப்படி அடுக்

குச் சொற்களால் அவனை அர்ச்சனை செய்து அலட்சியப்படுத்துவோர் எத்தனை பேர் என்று எப்படி கணக்கிட்டுச் சொல்வது?

நடு இரவு!
நடு வீதி!
பசியால் எரியும் வயிறு!
பார்வை மங்கும் கண்கள்!
தேடி அலையும் பார்வை!
தளர்ந்த நடை!

இந்நிலையிலே பக்கத்திலிருந்த சத்திரத்தினுள் நுழைந்தான் அவன். அவனுக்கு அது சத்திரம் என்று தெரியும். ஆனால் அந்த சத்திரத்துக் காவலாளிக்கு மட்டும் அது ஏனோ புரியவில்லை. உள்ளே நுழைந்தவனை வெளியே விரட்டினான் அந்தக் கல் நெஞ்சக் காவலாளி. அவனை அப்படி மாடுபோல் விரட்டுவதில் அவன் காணும் அற்ப மகிழ்ச்சி தான் அவனுக்குப் பெரிது. அது சிறிது சிறு மதியினர் செய்யும் சிறுசெயல், சில்லறை அதிகாரம் என்று எண்ணுமளவுக்கு அவனுக்கு அறிவு இருக்கும். ஆனால் அதை பயன் படுத்த அவனுக்குத் திறமையில்லை.

இரண்டாவது அபாய அறிவிப்பு! அதை ஏற்றுக்கொண்டு தளர் நடை தவழ, தெருவுக்கு வந்தான்.

பசியெடுத்த புலி,—அதைக் கண்டு பதுங்கும் ஆடு. இதில் எது வெற்றியடையும்? எல்லோருக்கும் தெரிந்ததுதானே இது! இரையைத் தேடி அலையும் புலி,—வலிய வந்து வலையில் விழும் ஆடு! இரண்டிற்கும் இடையே இடையன். எப்படி இருக்கும் புலிக்கு?—அப்படித்தான் இருந்தது அந்தச் சத்திரத்துக் காவலாளிக்கு! புலி எதிரியை அறையும்; மனிதன் விரட்டினான். மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வித்தியாசம் இது!

சத்திரத்திற்குள்ளே—

புழுதி படிந்த அறையிலே ஒரு வனிதை! பதினேழு வயது பருவப் பூம்பொழில் பூத்துக் குலுங்கும் வயது பண்ணிசை பாடும் பருவம்! அவள் அழகை மிகை படுத்தும் அங்கங்கள்!

எதிரே முறுக்கு மீசை. இரு பத்து நான்கு வயதுள்ள இளங் காளை, பருவத் துடிப்பு. இரண்டுக்கும் இடையிலே பருவத் துடிப்புக்கும் கற்பின் திண்மைக்கும் பெரும் போர்.

"ஐயா எதுவும் இல்லாத அனாதை ஐயா! ஏற்கனவே ஒருவருக்கு உரிமையானவளுங்கூட! ஐயா! பசிக்கு உணவளித்தீர். அதற்காக நன்றி செலுத்துகிறேன். படுத்துறங்க இடமும் தந்தீர்; இந்த உதவியை நான் என்றென்றைக்கும் மறக்க மாட்டேன். ஆனால் அதற்கு இந்த பிரதிபலன் கேட்பது தகுமா? முறையா? தாகத்துக்குத் தண்ணீர் கேட்டால் 'தருகிறேன்' என்றழைத்து தண்ணீரில் நஞ்சைக் கலந்து தரலாமா? உங்கள் தங்கையை ஒருவன் இப்படிச் செய்ய முயற்சிப்பதைக் கண்டால்—ஏன் நினைத்தால்கூட உங்கள் மனம் என்ன பாடுபடும்? சற்று எண்ணிப் பாருங்கள்.

"நிறுத்தடீ, என்னவோ பகுத்தறிவுப் பிரசங்கம் பண்றே! எந்த சினிமாவிலேடீ இந்த வசனத்தைக் 'காப்பி' அடித்தே? அப்பேற்பட்ட தீயிலுதித்த திரௌபதையே ஐந்து பேருக்கு மனைவியாக இருந்தும் அழியாத பத்தினியாக இருந்தாள். நீ

இரண்டு பேருக்கு மனைவியாக இருந்தால் இந்த உலகமே இடிந்து, சரிந்து விழுந்துவிடுமா? பசித்தவனுக்கு உணவளிப்பது தானே முறை?''

''முறை? அன்னிய னொருவனின் மனைவியின் கற்பை உணவு என்றுரைக்க உன் நா கூசவில்லை? மரக்கட்டையிடம் கொஞ்சிக் குலாவுவதிலே இன்பம் காணமுடியுமா? பாதகனே எட்டி நில்! நான் திரௌபதை வம்சமல்ல, கண்ணகி பரம்பரை!''

இப்படி பலபல வார்த்தைகளை பரிமாறிக்கொண்டார்கள் அவர்கள்! பலன்? முடிவு? இரை எதிராளியிடம் தோற்றது. அந்தப்பாவையின் கற்பு பஞ்சனெப் பறந்தோடி விட்டது. பாலிலே நஞ்சு! அப்படித்தான் ஆகியது அந்த அபலையின் கற்பு.

செழுமையான புல்—அதைக் கண்டு பசியெடுத்த பசு—தடுத்து நிறுத்த வேலியில்லை. அடித்துத் துரத்த ஆளில்லை—அடுத்த சில விநாடிக்குள் அந்த புல் இருந்த இடம் தெரியாது.

அப்படித்தான் நடந்தது அங்கே! அந்தச் சத்திரத்துப் புழுதி படிந்த அறையிலே மாசு படிந்த மங்கை—தூய்மையிலே களங்கம்.

அவள் அலறினாள். அழுதாள்: துடித்தாள்; துவண்டாள்.

* * *

''டேய் என்னடா! எழுந்திரு! எழுந்திரு!'' சிவப்புத் தொப்பி தூக்கத்தைக் கலைத்தது. திடுக்கிட்டு எழுந்தான் அவன். அன்றைய கூலிக்கு வேலை செய்துவிட்ட மகிழ்விலே மமதையோடு ஒரு பார்வை நடைபாதையில் படுத்துக் கிடந்தவன் மேல் வீசி விட்டு அவன் நடந்தான்—அதிகாரத்தின் தத்துப் பிள்ளை!

* * *

காலை மலர்ந்தது!

இளஞ் செஞ்ஞாயிறைக்கண்ட செந்தாமரைபோல அவன் முகத்தில் ஆனந்தம் அலையடித்துக் கொண்டிருந்தது. அவன் மகிழ்ச்சியுடன் நகரத்தின் நாலு புறங்களிலும் தேடினான். காலையில் மகிழ்ச்சியால் உப்பியிருந்த அவன் கன்னங்கள் மாலையில் அயர்ச்சியால் ஒட்டிவிட்டது.

''அம்மா!'' துன்பம் வரும்போது அதைமறக்கத்தமிழனை அன்புடன் அளித்திருக்கும் பதமிது! 'அம்மா' ஆகா உச்சரிக்கும் போதே எத்தனை இன்பம்! எல்லோரையும்போல அவனுக்கும் ஒரு அம்மா இருந்தாள்—இப்போது இல்லை.

ஒரு வீட்டின் வெளிப்புறத் திண்ணையில் உட்கார்ந்து தான் அவன் ''அம்மா'' என்று தன்னை மீறிய அலுப்பால் கூறிவிட்டான். ஆனால் அது தெரியாத உள்ளே இருந்த ஒரு அம்மை வெளியே வந்து, ''என்னப்பா வேண்டும்?'' என்று அன்பொழுக இன்மொழி பகர்ந்தாள். அவள் குரலிலே ஒரு கனிவு! தாய்மைப் பாசம்! 'இப்படியும் மனிதர்கள் உலகத்தில் இருக்கிறார்களா?' என்று தான் அவன் அந்த சமயத்தில் எண்ணியிருப்பான்.

''அம்மா, பசி!'' அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை—ஏன் அவனால் பேசமுடியாது. அத்தனை அகோரப் பசி!

அன்புடன் அழைத்து அமுதம் தந்தாள் அந்த அம்மை. அவன் பசியால் 'பரக்கப்பரகக' தின்ன

தைக் காண்பதிலே அவளுக்கு அளவற்ற ஆனந்தம்—தான் அன்புடன் பாலைத் தேக்கி தன் கன்றுக்காக வைத்திருக்கும் போது தன்கன்று முட்டி முட்டிப் பாலுண்ணுவதைக் கண்டு களிப்பெய்தும் தாய்ப்பசுவைப்போல!

உடல் பசி தீர்ந்தது. ஆனால் உள்ளத்துப் பசி? அது எப்படி நீங்கும்?

* * *

இன்பக் கடலிலே நீந்தினர்கள் அவர்கள்—செங்கமலமும் அம்பலவாணனும். அம்பலவாணன் ஆண்மைச் செறிவுள்ள அழகன். செங்கமலம்—அம்பலவாணனின் அத்தை மகள்; முறைப் பெண். செங்கமலம் ஆகா! எத்தனை அழகான பெயர். அளவுள்ள உயரம்; ஒல்லியான தேகம்! மாஞ்சிவப்பு; மங்கைப் பருவ அங்கங்கள்; குவிந்த உதடுகள்; குறுகிய இடை; நீண்ட கண்கள்; வளைந்த புருவம் வட்டமான முகம். அவள் அழகி அவன் அழகன். ஜோடிப் பொருத்தம்—மிகப் பொருத்தம் என ஊரார் பேசிக்கொண்டனர். ஆனால் அதைக்காண வெறுப்பு ஒரே ஒரு ஜீவனுக்கு! அவன் தான் அழகேசன். அவனும் செங்கமலத்திற்கு தூரத்து உறவில் முறைக்காரன். இவர்கள் இருவருக்கிடையே மணப்போர் நடந்தது. சந்தர்ப்பமும் கைக்கூலி நட்சத்திரப் பொருத்தமும் அழகேசனுக்கு செங்கமலத்தை அளித்தது. ஆனால் அதற்காக சற்றும் கலங்கவில்லை துணைப்புறுக்கள்.

புறுக்கள் கூண்டிலிருந்து பறக்கத் திட்டமிட்டன. திட்டம் சரியாகத்தான் தீட்டப்பட்டது. ஆனால்?

இரவு பதினொரு மணி 'மெயில்' வேகமாகப் போய்க்கொண்டிருந்தது சென்னையை நோக்கி! அதிலுள்ள பலரிடையே செங்கமலமும் அம்பலவாணனும் இருந்தனர். அவர்கள் எதிர்கால இன்ப வாழ்க்கையை எதிர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் எண்ணமெல்லாம், எதிர்காலத்தில் அவர்கள் நடத்தப்போகும் வாழ்வைப்பற்றியது தான்.

"ஆலையிலே வேலை செய்துவிட்டு அலுப்புடன் வீட்டுக்கு வருவோம், "வாங்க என், அன்பு அத்தான்" என்று அன்பாக அழைத்து கொஞ்சு மொழி பேசுவாள்" இப்படி எண்ணினான் அம்பலவாணன்.

"கடும் வெயிலிலே வேலை செய்து களைத்து வீடு திரும்புவார் என் அத்தான். என் இடுப்பிலே அவரைப் போலவே—ஆனால் சிறிய உருவில் ஒரு குழந்தை இருக்கும். அது அவரைப் பார்த்ததும் "அப்பா" என்று தன் மழலை மொழியால் அழைத்து மகிழும். அவர் களைப்பை மறந்து அம்மழலை மொழியால் இன்பங் காண்பார்" இப்படி என்னவெல்லாமோ எண்ணினாள் செங்கமலம்.

கரும்பூதம்போல் காரிருளைக் கிழித்து ஓடிக்கொண்டிருந்தது ரயில். ஆனால் யாரோ ஒரு அரைப்பைத்தியத்தின் ஆவேசச் செய்கையால் தண்டவாளம் பெயர்த்தெடுக்கப்பட்டிருந்தது. காரிருளில் கரும்பூதத்தின் சக்கரங்கள் தடுமாறிப் போய் விட்டன. ரயில் கவிழ்ந்தது.

எத்தனையோ பேர்கள் உயிரை இழந்தனர். கால் ஒருவனுக்கு இல்லை. கை ஒருவனுக்கு இல்லை. கணவனை இழந்தனர் பலர். கைக் குழந்தையைக் கைவிட்டனர் பலர். மனைவியை இழந்தவர் பலர்: மகனைக் காணாதார் பலர். இப்படிப் பல கண்ணருவிக் காட்சிகள் அங்கிருந்தன.

இது நடந்த இரு மாதங்களுக்குப் பிறகு......

சென்னையிலே...தன் பெயர் என்றென்றைக்கும் அழியாது நிலைக்க வேண்டுமென்று எவனோ புகழ் விரும்பிக் கட்டிய சத்திரத்திலே-கற்பைப் பறிகொடுத்துக் கலங்கி நிற்கிறாள் செங்கமலம்.

கண்கள் மங்க, கால்கள் தளர, ''அம்மா பசி!'' என்று அலற அதைக்கண்ட ஒரு அம்மை உணவளிக்க, சாப்பிட்ட பிறகு திண்ணையிலே வான வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவன் சிந்தனையைக் கலைக்கிறாள் வீட்டுக்காரம்மாள்.

நாட்கள் பின்னும் பல நகர்ந்தன. இப்போது அந்த வீட்டுக்காரம்மாள் — ஞானம்பாள் — அவளுடைய மளிகைக் கடைக்கு அம்பலவாணன்தான் முதலாளி. பருவ வயதிலுள்ள தன் மகனைப் பறிகொடுத்த அந்த அம்மை அம்பலவாணனைத் தன் மகனாக நினைத்துத் தாய்மைப் பாசத்தை வளர்த்துக்கொண்டாள்.

* * *

அன்று சனிக்கிழமை. கடைக்கு விடுமுறை. அம்பலவாணன் கடற்கரையிலே உட்கார்ந்து கொண்டு நீலக்கடலை வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான். அவனைத் தவிர எல்லோரும் ஒவ்வொருவராக எழுந்து போவது அவன் நீர் நிறைந்த கண்களுக்குத் தெரியவில்லை போலிருக்கிறது. அப்போது



அவன் கண்கள் எதையோ காணு ததைக் கண்டுவிட்டன. அவன் எழுந்து ஓடினுன்; கடலில் விழுந் தான். கடல் நீரைவிட்டு அவன் மணற்பரப்பில் ஏறும்போது அவன் கைகளிலே ஒரு காரிகை. அம்பலவாணன் தூரத்திலே யாரோ ஆவேசமாகக் கடலில் இறங்குவதைக் கவனித்துவிட் டான். விஷயம் விபரீதமாவதற் குள் கடலிலிருந்து தூக்கிவிட் டான்.

கடற்கரை வீதியின் விளக்குக் கம்பத்தினருகே ஒரு ஆடவனின் பிடியிலே அணைப்பில் கண்ணைத் திறந்தாள் அவள். அவள் முகத் தைக் கூர்ந்து கவனித்த அவன் இதயம் துள்ளியது.

"ஆ! செங்கமலம்!" அம்பல வாணன் வாய் விட்டே அலறி விட்டான். "ஐயோ, அத்தான்!" அவளும் அப்படியே!

ஆனுல் அடுத்த விஞடிக்குள் அவள் அவனிடமிருந்து விலகிக் கொண்டாள். பலவந்தமாக விலகிக்கொண்டாள்.

"என்ன செங்கமலம்?" அம் பலவாணனின் முகம் சுண்டி விட்டது.

"என்னைத் தொடாதீர்கள்! நான் மாசுபடிந்தவள். உங்களுக் குத் துரோகம் செய்துவிட்டேன் நான்..." அவள் தொண்டை அடைத்துக் கொண்டது.

"என்ன செங்கமலம்? விஷ யத்தை விளக்கு. என் இதயம் வெடித்துவிடும்போல் இருக் கிறதே!" அவள் குரல் நடுங்கி யது; தேகம் படபடத்தது.

அவள் ஆதியிலிருந்து அந்தம் வரை ஒன்றையும் ஒளிக்காமல் கூறிவிட்டாள். அதைச் சொல் லும்போது அவள் நெஞ்சம் அடைத்துக்கொண்டது. கண்கள் நீரருவியாயின!

"செங்கமலம் அழாதே! உன் தூய்மை இன்னும் அதிக மாகிறது. உன்னைப் போன்ற உத்தமியைக் காண்பதே அரிது. உன் கற்பு களங்கப்பட்டு விட் டதே என்று நீ நினைத்து உள்ளம் உருகும் போதே உன் மாசு மறைந்து கற்பு பின்னும் முன்னை விடத் தூய்மையாகிறது. நடந் ததை ஒரு கதை என்று நினைத்து மறந்துவிடு.

"இன்பம்—அது ஒரு வற்றாத ஜீவ நதியல்ல—அது ஒரு சிற் ருறு. மழை இருந்தால் நீர் வரும்; மழை இல்லா விட்டால் அங்கே மணலைத்தான் காண முடியும். அந்த மணலை நீரென்று நினைத்து அதில் குதித்து இறக் கிறவன் அவன்.

நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வளவோ முயற்சித் திருக்கிருய். முடியவில்லை. என்ன செய்வது? இப்போது உன்னை நான் முன்னிலும் அதிகமாக நேசிக்கிறேன்" அப்படிக் கூறும் போது அம்பலவாணனின் முகத் தில் ஒரு புதிய ஒளியைக் கண் டாள் செங்கமலம்.

* * *

பின்னும் ஒரு மாதத்திற்குப் பிறகு.........பௌர்ணமி பூர்ண சந்திரன் பாலெனக் காய்ந்துக் கொண்டிருந்தான்.

அலை மோதும்கடற்கரை.

"சிக்கலும் புதிரும் நிறைந் ததே வாழ்க்கை அதைப்பிரித்துப் புரிந்து கொள்கிறவனே வாழ் கிருன்".

"நீங்கள் இப்போது சொன் னீர்களே இதை வேறு யாரா வது உலகில் புகழ்பெற்ற ஒரு

வர் சொல்லியிருந்தால் உலக அனுபவ ஏடுகளிலே தேவ வாக்காகப் பொறிக்கப்பட்டிருக்கும் அது!'' என்று சொல்லி 'கலீர்' என்று கன்னங் குழியச் சிரித்தாள் அவள்!

'செங்கமலம்'

'அத்தான்'

தங்களை மறந்திருந்த அவர்களை ''ஐயா!'' என்ற தீனக் குரல் தட்டி எழுப்பியது, நேரமும் அதிக மாகி விட்டது.

''ஐயா! நொண்டி ஐயா! காலணா, அரையணா இருந்தால் கொடுங்க ஐயா! உங்க புள்ளே குட்டிகளுக்கு புண்ணியம் ஐயா! நொண்டி உள்ளம் உருகக் கேட்டான் தடியை ஊன்றிக் கொண்டு.

அவனை செங்கமலம் கூர்ந்து கவனித்தாள்.

அவன்?

சத்திரத்துக் காவற்காரன்.

''சதிகாரா?'' செங்கமலம் பெண் புலிபோல் சீறினாள்.

''அவனை ஒன்றும் சொல்லாதே செங்கமலம். அவன் அன்று செய்த பிழைக்கு இதோ கிடைத்திருக்கும் பரிசைப் பார். அவனவன் செய்த பலனை அவனவன் அடைந்துதான் தீரவேண்டும். அதுதான் உலகநியதி. வா போகலாம்'' என்றான் புரிந்து கொண்ட அம்பலவாணன்.



''டொக்'' என்று தன் மண் பாண்டத்தில் விழுந்த முழு நான்கணாவையும் தூரத்தே நடந்து செல்லும் அவர்களையும் மாறி மாறிப் பார்த்தான் அவன்.

''பலன்?'' அவன் வாயிலிருந்து கேள்விக் குறியோடு வந்த வார்த்தை இது!

மறுநாள் காலை.

கடற்கரையிலே, காலைக் கதிரவனின் கடும் வெயிலில் மணலின் மத்தியில் கவனிப்பாரற்று ஒரு நொண்டியின் பிரேதம் ஒதுங்கி யிருந்தது.

அது?

*

நமது அலுவலகத்தின்

புதிய முகவரி

"பொன்னி"

127, பிராட்வே,

சென்னை-1.


## கொக்-சாஸ்திரம்



தனிமையில் படிக்க — ஆண் பெண் உறவு குறித்த படங்களும், நீங்கள் இதுவரை படித்திராத பல உபயோகமான விஷயங்களும் அடங்கியது

விலை ரூ. 3. தபால் செலவு ரூ. 1.

## படுக்கையறைப் படங்கள்

பெண்களின் அந்தப்புர நிலைகள் —படுக்கையறைக் காட்சிகள்— அழகு —இன்னும் வேறு பல காண விரும்புகிறீர்களா? அப்படியானல் இன்றே ஆர்டர் செய்க. 50 படங்கள் கொண்ட செட் 1-க்கு ரூ. 5.

தபால் செலவு ரூ. 1.

இரண்டும் ஆர்டர் செய்தால் ரூ. 8.

H. H. Stores (P. M.)
Post Box 51, MEERUT.



# மாதவிடாய் நின்றுபோனதா?

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/668

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

# கர்ப்பதடை

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)** Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST., கொழும்பு-11.




## அஞ்சலிதேவி

மர்மயோகி, நிரபராதி முதலிய படங்களில் நடித்து நேயர்களின் நன்மதிப்பைப் பெற்ற அஞ்சலி தேவி இரத்தபாசத்தின் மூலம் மேலும் பொதுமக்களைக் கவர்ந்துள்ளார்.

# நம் கருத்து

அசோகா பிக்சர்சாரின்
## "என் மகள்"

கதை: ஆச்சார்யா.
வசனம்: ந. இராமசாமி
டைரக்ஷன்:
கே. வி. ஆச்சார்யா, எம். கே. ஆர். நம்பியார்.
மேற்பார்வை:
இராசா சந்திரசேகர்.

**கதை:**

ரகு என்னும் தீயவனை மகனகப் பெற்ற ஜமீன்தார், அவனைத் திருத்த தனது கடனாளியான சோமசுந்தரத்தின் மகள் வசந்தாவை மணம் செய்து வைக்கிறார். ஆனால் அவனோ அவளை வெறுத்து அவள் தோழி மல்லிகாவைக் காதலிக்கிறான். மல்லிகாவை வசந்தாவின் அண்ணன் பாலு காதலிக்கிறான். அவளும் அவ்விதமே.

வசந்தா, கணவனே கண்கண்ட தெய்வமெனக் கருதினாள். ரகு, ரஞ்சன என்ற நடன மாதுவின் கலைக்கு அடிமையாகிறான். ஒரு நாள் மல்லிகா ரகுவினால் பலவந்தமாகத் தூக்கிச் செல்லப்படுகிறாள். அவளை மீட்க பாலுவும் அவன் துணையாட்களும் ரகுவைப் பின்தொடர்கின்றனர். ரகு, மல்லிகாவினால் குத்தப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறான். அங்கே மருத்துவர் அவனுக்குத் தேவையான இரத்தம் கொடுத்து காப்பாற்ற நினைக்கிறார். அது சமயம் வசந்தா அங்கு வரவே அவள் இரத்தம் அளிக்கப்படுகிறது ரகுவிற்கு. அதனால் உயிர் பெற்றெழுகிறான். பின் தன் தவறை உணர்கிறான். வழக்கம் போல் மங்களம் பாடப்படுகிறது.

ஏற்கனவே கண்டும், கேட்டும் சலித்துப்போன கதையமைப்பு. எந்தவித நீதியோ, இலட்சியமோ, புதுமைக் கருத்துக்களோ இதில் எள்ளளவும் கையாளப் படவில்லை. அர்த்தமற்ற கற்பனைகள், அடிப்படைக் கோளாறுகள், அணுவளவேனும் சுவைதர முடியாத காட்சிகள். இவைதான் என்மகள் படம்.

வசனம்: உள்ளத்தைத் தொடும் நிலையோ, எளிதில் யாரும் புரிந்துகொள்ளும் நடையோ, புதுமைப் போக்கோ அற்றது. சுருங்கச் சொன்னால் சுவையற்ற சொற்களின் அடுக்குகள்.

நடிப்பு: இதில் எம். என். நம்பியாரைத் தவிர மற்ற எவர் நடிப்பும் உயர்ந்ததாக அமையவில்லை.

பாடல்கள்: இதுவும் வசனத்தைப்போலவே நிறைவு பெறவில்லை. இசையமைப்பும் அப்படித்தான்.

டைரக்ஷன்: இரண்டு டைரக்டர், ஒரு மேற்பார்வையாளர் என்று சுவரொட்டிகளிலும், படத்தின் தொடக்கத்திலும் பெயர்கள் தெரிகிறதே தவிர, அவர்கள் இதிலென்ன சாதித்திருக்கிறார்கள் என்ற கேள்விக்குப் பதில் காண்பது அரிதாயுள்ளது.

ஒளிப்பதிவு ஓரளவு பரவாயில்லை. இருந்தாலும் அதன் மதிப்பைக் கெடுத்துவிட்டது நடிகர்கள் நாடகத்தில் நடிப்பது போன்றுள்ள காட்சிகள். ஒலிப்பதிவு மிகவும் மட்டம். ரஞ்சன் தமிழ்தான் பேசுகிறாரா என்பது அறியமுடியாத நிலையில் அமைந்துள்ளது. அசோகா பிக்சர்சார் **என் தங்கை** மூலம் பெற்ற புகழை **என் மகளின்** தோல்விக்கு ஈடு செய்ய முடியாது. —"**வளவன்**"

கதை:

மேல் நாட்டுக் கல்வி கற்று வீண் ஆடம்பரங்களில் மயங்கித் தன்நிலே மறந்தவனுய் வாழ்வைக் கழிக்கிருன் மோகன். பெற்ற தாயையும், உற்ற மனே வியையும் இழிவு படுத்தியதோடல்லாமல் நண்பன் பாலுவின் மீதும் வீண் பழியைச் சுமத்துகிருன்.

வாழ்க்கையில் நெறி தவறிய வனிதை காந்தாவின் வனப்பிலே மயங்கி—பொருளே இழந்து, கொடுமை நோயாகிய குட்டத்தைப் பெறுகிருன். அவன் நிலேயைக் கண்ட காந்தா தன் வீட்டினின்றும் வெளியேற்றுகிருள். வெளியேறிய மோகன் இடி மின்னலுக்கிலக்காகிக் கண்களேயும் இழக்கிருன்.

கையில் ஓடேந்தி, பிச்சைக்கலேகிருன். மோகனின் மாறுதலால் அடையாளங் கண்டுகொள்ளாத பாலு அவனேப் பிச்சைக்குச் சந்திராவின் வீட்டிற் கழைத்துச் செல்கிருன்.

அப்பொழுது செய்தித்தாளில் வெளியாகியிருந்த காந்தாவின் மரணத்தைப்பற்றி பாலு படிக்கிருன். அதைக்கேட்டதும்மோகன் அலறுகிருன். இதனின்றும் மோகனேயறிந்து கொண்ட பாலுவும்—சந்திராவும் அவனே நெருங்கினர். மோகன் அவ்விருவர்களேயும் வாழ்க்கைத் துணேவர்களாக்கி, தான் உயிர் துறக்கிருன். படித்தும் பண்பற்றவனுய், வளமிருந்தும் வாழத் தெரியாதவனுய், 'கண்டதே காட்சி கொண்டதே கோலமெனக் குறிக்கோளற்ற குணக்கேடனின் வாழ்வைச் சித்தரிப்பதுதான் இரத்தக் கண்ணீரின் கதை அமைப்பு.

வசனம்:— இடத்துக் கேற்றவாறு புதுமைக் கருத்துக்களோடு, பொருள் நிறைந்த எளிய நடையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

பாடல்கள்:— மற்ற படங்களேப்போலல்லாது இனிய நடையில் தூய தமிழில் பொருளாழத்துடன் அமையப் பெற்ற பாடல்கள்.

நடிப்பு:— இதே நடிப்பை நாடக மேடையில் நடித்துப் பாராட்டுதல் பெற்ற ராதா இன்னும் தன் நடிப்புக்கு மெருகு கொடுத்து, அதற்கேற்ற புகழையும் திரைப் படத்தின் மூலம் பெற்றுவிடுகிருர். காந்தாவாக நடித்துள்ள எம்.என். ராஜம் தன் திறமையை இதில் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். மற்றவர்களின் நடிப்பும் ஏற்றுர்போல் அமைந்துள்ளது. மாமா—டைரக்டர் டிப்டாப்பாக நடிக்கும் சந்திரபாபுவின் நடிப்பு இதில் கொஞ்சம் அதிகம்தான்.

டைரக்ஷன்:—கிருஷ்ணன்-பஞ்சு இப்படத்தின் உயர்விற்குத் தங்கள் முழு உழைப்பையும் பயன் படுத்தியுள்ளனர்.

திரைப்பட உலகில் தமக்கென ஒரு தனி இடத்தை அமைத்துக் கொண்டனர் நேஷனல் பிக்சர்சார். அதற்கு மக்களின் பாராட்டுதலேப் பெற்றுள்ள பராசக்தி, இரத்தக் கண்ணீர் போன்ற படங்களே எடுத்துக்காட்டாகும்.

## ரத்தக் கண்ணீர்

தயாரிப்பு:
நேஷனல் பிக்சர்ஸ்

கதை, வசனம்:
K. தங்கராசு

டைரக்ஷன்:
கிருஷ்ணன்-பஞ்சு




வேலைக்காரிக்குப் பின் எத்தனையோ படங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வெளிவந்தன. ஒன்றுகூட வேலைக்காரி அடைந்த அளவு வெற்றியடைய முடியவில்லை. பல, படுதோல்விப் படங்களாக அமைந்தன.

பெரும் பொருட் செலவு செய்து நட்சத்திர நடிகர்கள் நடித்து, நல்ல டைரக்டர் மேற்பார்வையில் தயாராகிக்கூட பல படங்கள் தோல்வி அடைந்துள்ளன. இதற்கு எடுத்துக்காட்டு ஜூபிடரின் விஜய குமாரி.

படத் தயாரிப்பாளருக்கு புதுப் புது யோசனைகள், புதுப் புது வழிகள், புதுமை மிக்கக் கருத்துக்கள் தோன்ற வேண்டும். ஒன்று வெளிவந்தால் அதைப் பின்பற்றி அதேமாதிரி பல வர ஆரம்பித்தால் தோல்வி அடையாமல் என்ன செய்யும்?

சில நாட்களுக்குப் பின் திரைவானிலே புதுமை ஒளி வீசியது. கருணாநிதி எழுதிய 'மந்திரி குமாரி' மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பாக வெளிவந்து அமோக வெற்றியும் பெற்றது. துள்ளிடும் தமிழ் நடை உள்ளத்தை அள்ளிடும் சொல்லடுக்கு; பலமுறை பார்த்து வசனத்தைக் கேட்டு மகிழத் துடிதுடித்த மக்கள் எண்ணற்றோர். கருணாநிதி என்ற பெயர் வந்தாலே கைதட்ட ஆரம்பித்துவிட்டனர் ரசிகர்கள்.

பின்னும் தொடர்ந்து பல படங்கள் தோல்வி. சுமாரான வெற்றி அடைந்தவை ஒன்றிரண்டு படங்களே. மீண்டும் பட உலகிலே வழக்கையே தகர்த்தெறிந்து (Record break) நேஷனல் பிக்சர்ஸ் 'பராசக்தி' என்பது எல்லோருடைய ஏகோபித்த அபிப்பிராயமாகும். அழகு தமிழ் நடையிலே, அற்புதமான சுவைமிக்க வசனங்களை கருணாநிதி எழுதி அவருக்கென ஒரு தனி வழியையும் வகுத்துக் கொண்டார். 'பராசக்தி'யில் பாடல்கள் ஒவ்வொன்றும் தித்திக்கும் தெள்ளமுதாக அமைந்து படத்தைப் பல மடங்கு வெற்றிகரமாக்கி பணப் பெட்டியையும் மகிழ்வித்தது.

குழந்தைகள் மனதைக் கவர வல்ல முறையில் குழந்தைக் கதையாக, புதுமுறையாக 'அண்ணி' வெளிவந்து அபரிமிதமான வெற்றியைப்பெற்றது.

அதற்குப் பின் ஹாஸ்ய மார்க்கெட்டாக மாறிவிட்டது. கல்யாணம் பண்ணிப் பார். இல்லற ஜோதி, கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி போன்ற படங்கள் வந்து நல்ல வெற்றியும் பெற்றன. இதில் மிக உயர்ந்த கவிதை நடைத் தமிழில் கவிஞர் கண்ணதாசனின் வசன அமைப்பைக் கொண்டு பத்திரிகைகள், ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது.

அதற்குப் பின் 'மனோகரா' வெளிவந்து தமிழ் நாட்டையே ஒரு கலக்குக் கலக்கியது. மு.க.வின் வசனத்தாலும், சிவாஜி கணேசன், கண்ணாம்பாவின் உணர்ச்சிமிக்க நடிப்பாலும் மிக அதிகமான வசூலைத் தந்து பட உலகையே தட்டி எழுப்பித் தெம்பூட்டியது.

இதற்குப் பின் எத்தனையோ படங்கள், மாதம் பலவாக, வாரம் ஒன்றாகத் தொடர்ந்து வர ஆரம்பித்துவிட்டன. வருகிற மாதிரியைப் பார்த்தால் மீண்டும் படத் தொழில் படுத்துவிடுமோ என ஐயுறச் செய்கிறது. ஒரே கதை பல முதலாளிகள் கையில், திருட்டுக் கதைகள் சில எழுத்தாளர்கள் கையில், ஒரே மாதிரி பல படங்கள் — இப்படியாகக் குழப்பநிலை ஏற்பட்டு வருகிறது. இது தொடர்ந்தால் நிச்சயமாகத் தமிழ்ப்பட உலகில் மாறாத மந்தநிலை ஏற்பட்டு, மக்களின் தூற்றுதலுக்கு ஆளாகி மங்கி மறைய வேண்டியதுதான்.

*


Telephone No. 55748

Telegrams PUZZLE

# லோட்டஸ்

## கிராஸ்வேர்ட்ஸ்

பிரபாத் பில்டிங்ஸ்,
சென்னை-1.

—o*o—

போட்டி உலகிலே ஓர் புதுமைப் புரட்சி!

லோட்டஸ் கிராஸ்வேர்ட்ஸ் மாதம் சராசரி ரூ. **2,00,000**க்கு மேல் பரிசளிக்கிறது.

எளிய குறிப்புகளைத் தந்து ஏற்ற விடைகளைத் தேர்ந்தெடுப்பதில் லோட்டசுக்கு நிகர் லோட்டஸ்தான்.

ஐவரைக்கொண்ட அட்ஜுடிகேஷன் கமிட்டி ஜனநாயக முறையிலே விடைகளைத் தேர்ந்தெடுக்கிறது!

பரிசு பெற்ற நேயர்களுக்கு பரிசுத் தொகையை பணமாகவே M.O. மூலம் அனுப்புகிறது லோட்டஸ்!

ஆயிரக்கணக்கான நேயர்கள் பரிசுபெற்று மகிழ்கின்றார்கள்! நீங்களும் முயற்சித்தால் முதற்பரிசு நிச்சயமாய்ப் பெறலாம்!

முதற்பரிசு பெற்று வாழ்க்கையில் முன்னேறுங்கள்!

**இது ஒரு நல்ல சந்தர்ப்பம்!**

இலவச கூப்பன்கள் எல்லாமொழிகளிலும் லோட்டஸ் கூப்பன் கலெக்டர்களிடம் கிடைக்கும்.




### வெறும் பேச்சல்ல

பிரின்ஸிபல் பிக்சர்ஸாரின் 'வெறும் பேச்சல்ல' என்ற படத்தின் படப்பிடிப்பு அதிவிரைவாக நெப்டியூன் ஸ்டுடியோவில் நடந்து வருகிறது. இதில் பாலையா, பத்மினி காதலர்களாக நடிக்கிருர்கள்.

* * *

### அண்ணியின் வளையல்

வைரமாலையைத் தயாரித்தவர்கள் 'அண்ணியின் வளையல்'களை தயாரிப்பதற்கான ஏற்பாடுகளை துரிதமாகச் செய்துவருகிருர்கள். இது 'வதிஞ்சியா பகிடி' என்ற மராத்தி கதையின் தழுவலாம். இதில் ஜூனியர் ரஞ்சினி, எம். கே. ராதா, ராகினி முதலியோர் நடிப்பார்களாம். இதன் வசனத்தையும் பாடல்களையும் கண்ணதாசனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்.

* * *

### கள்வனின் காதலி

கல்கியின் 'கள்வனின் காதலி'யை ரேவதி ஸ்டுடியோவில் படமாக்குகிருர்களாம். இதில் கே. சாரங்கபாணி, கே. ஆர். செல்லம் சம்பந்தப்பட்ட படிப்பிடிப்பு அண்மையில் நடந்ததாம். இதன் வசனத்தை எஸ், டி. சுந்தரமும், டைரக்ஷன் பொறுப்பை வி.எஸ். ராகவனும் ஏற்றிருக்கின்றனர்.

### தியாகம்

எம். கே. ராதா டி. எஸ். துரைராஜ், மைனுவதி முதலிய நடிகர்களின் கூட்டுத் தயாரிப்புதான் 'தியாக'மாம். இதன் படப்பிடிப்பை சியாமளா ஸ்டுடியோவில் தொடங்குவார்களாம்.

* * *

### செந்தாமரை

மதராஸ் பிக்சர்ஸாரின் படமான 'செந்தாமரை'யின் படப்பிடிப்பு தொடர்ந்தாற்போல் நியூடோன் ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது. திராவிட நாடு துணை ஆசிரியர் தோழர் அரங்கண்ணல் எழுதியுள்ள இதன் கதை வசனத்தை பீம்சிங் டைரக்ட் செய்துவருகிருர். இதில் லலிதா-பத்மினி, சிவாஜி கணேசன், எம். கே. ராதா ஆகியோர் நடித்து வருகிருர்கள்.

* * *

### குலேபகாவலி

ஆர். ஆர். பிக்சர்ஸாரின் அடுத்த படமான 'குலேபகாவலி'யின் வேலைகளை வெகு துரிதமாக நடத்தி வருகிருர்கள். இதில் அஞ்சலி, எம். ஜி. ராமச்சந்திரன் முக்கிய பாகமேற்று நடிக்கிருர்கள். இதன் கதை வசனத்தை தஞ்சை ராமையதாஸ் எழுதியிருக்கிருர். இதன் டைரக்டர் ராமண்ணுதான்.

### கோமதியின் காதலன்

ஆனந்த விகடனில் தொடர் கதையாக தேவன் எழுதிய இந்தக் கதையைப் படமாக்க டி.ஆர். ராமச்சந்திரன் முயன்று வருகிறாராம். அதற்கான அலுவல்கள் யாவும் துரிதமாகச் செய்து வருகிறாராம்.

*　　*　　*

### மரகதம்

மலைக்கள்ளனை வெளியிட்ட கோவை பக்ஷிராஜாவின் அடுத்த தயாரிப்பு தான் 'மரகதம்' இதுவும் புகழ்பெற்ற 'கருங்குயில் குன்றத்து கொலை' என்னும் கதையாகும். இதில் பத்மினி, நாகையா, நடிக்கிறார்களாம்.

*　　*　　*

### பெண்ணரசி

மாங்கல்யத்தை வெளியிட்டு படவுலகில் மதிப்பைப் பெற்ற எம்.ஏ.வி. பிக்சர்சார் தங்களின் அடுத்தத் தயாரிப்பான 'பெண்ணரசி'யை விரைவிலே வெளியிடப் போகிறார்களாம். இதில் ஏ. பி. நாகராசன், நம்பியார், எஸ். ஏ. நடராசன், கண்ணாம்பா, சூர்யகலா, ராஜ சுலோசனா முதலியோர் நடித்து வருகின்றனர். இதன் கதை வசனத்தை ஏ. பி. நாகராசனே எழுதியுள்ளார்.

*　　*　　*

### நல்ல தங்கை

எஸ். ஏ. நடராசனின் சொந்தத் தயாரிப்பான இதன் கதை வசனத்தை ஏ. பி. நாகராசன் எழுதியுள்ளார். இதில் மாதுரிதேவி, எம். என். நம்பியார் முதலியோர் நடிக்கின்றனர். இதன் படப்பிடிப்பும் கோவையில்தான்.

### முதல் தேதி

பத்மினி பிக்சர்ஸாரின் இரண்டாவது படமான 'முதல் தேதி' யில் அஞ்சலி, சிவாஜி கணேசன் முக்கிய பாகமேற்று நடிக்கின்றனர். இதன் டைரக்டர் ப. நீலகண்டன் தான்.

*　　*　　*

### பெரிய வீட்டுப்பிள்ளை

கோவை அமிர்தம் பிக்சர்சார் மேலே கண்ட கதையைப் படமாக்கத் திட்டமிட்டு அதில் ரஞ்சன் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதன் கதை வசனத்தை அருணனும், பாடல்களை கண்ணதாசனும் எழுதுவார்கள்.

*　　*　　*

### இன்ப விளக்கு

வீனஸ் புரொடக்ஷன்ஸ் என்ற புதிய படத் தயாரிப்பாளர்கள், நாடக நூலாக வெளிவந்து பத்திரிகைகளாலும், படித்தவர்களாலும் பாராட்டுதல் பெற்ற இக்கதையைப் படமாக்கத் திட்டமிட்டுள்ளனர். இதில் முக்கிய நடிகர்கள் பங்கு கொள்வார்களென்றும், விரைவில் படப்பிடிப்புத் தொடங்கலாமென்றும் தெரிகிறது.

*　　*　　*

### மகேஸ்வரி

இதன் கதை, வசனத்தை ஏ. பி. நாகராசன் எழுதுவதற்குப் பதிலாக ஏ. எஸ். ஏ. சாமிக்கு மாற்றப்பட்டிருக்கிறதாம். கதை வசனம் எழுதுவதுடன் சாமியே டைரக்ட் செய்வாரென்றும் தெரிகிறது.




Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd.,
at Ponni Achakam. 127, Broadway. Madras-1.

# பொங்கல் செய்தி!

●

ரூபாய் ஐந்து M. O. அனுப்பி கூப்பனில் அச்சிட வேண்டிய பெயரும் முகவரியும் எழுதியனுப்புங்கள்.

100 விசிட்டிங் கார்டுகள்

100 அஞ்சல் அட்டைகள்

200 கடிதத்தாள் (2 கற்றை)

ஆகியவை அச்சிட்டு நீங்கள் குறிப்பிடும்

— முகவரிக்கு அனுப்பப்படும் —

பொங்கல் நாளில் உங்கள் நண்பர்களுக்குப் பரிசளிக்க இப்பொன்னன வாய்ப்பைப்

— பயன் படுத்திக்கொள்ளலாம். —

முன் பணம் அனுப்பவேண்டும்.

வி. பி. பி. அனுப்ப இயலாது.

12—1—55 வரைதான் இந்த ஏற்பாடு.

●

## பொன்னி அச்சகம்

127, பிராட்வே :: சென்னை—1.